308/6

P.B.
Tam. 29

P. B. Tam. 29

G. U. Pope

Second catechism of Tamil grammar

22200214379

# POPE'S

## SECOND CATECHISM

OF

# TAMIL GRAMMAR.

தமிழ்

# இலக்கண வினாவிடை.

ஆறாம் பதித்தல்.

இது

தஞ்சையிலுள்ள

ஜி. யூ. போப்பையரால்

செய்யப்பட்டது.

MADRAS:

PRINTED AT THE PUBLIC INSTRUCTION PRESS.

1858.

WELLCOME
LIBRARY
INSTITUTE

[The references in the *Tamil Poetical Anthology*, Published by the Director of Public Instruction, are to be adapted to this Grammar, as well as to the III and larger one.]

# POPE'S

## SECOND CATECHISM OF TAMIL GRAMMAR.

## இலக்கண நூற் சுருக்க வினு விடை.

முதலாவது : எழுத்ததிகாரம்.

# I. ORTHOGRAPHY.

## க. எழுத்தியல்.

### I. LETTERS.

**1. CLASSES OF LETTERS.**

க. தமிழ்ப்பாஷையின் எழுத்துக்கள் எத்தனை வகைப்படும் ?

உயிர்எழுத்து, மெய்யெழுத்து, ஆய்த எழுத்து, உயிர்மெய்எழுத்து என நான்கு வகைப் படும்.

**2. VOWELS.**

உ. உயிர் எழுத்துக்கள் எவை?

அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ, இப்பன்னிரண்டும் உயிர்எழுத்துக்கள் ஆம்.

[ஆவி, அச்சு, சுரம் எனவும் படும்.]

**3. SHORTVOWELS.**

ங. இவற்றுள், குற்றெழுத்துக்கள் எவை?

அ, இ, உ, எ, ஒ குற்றெழுத்துக்கள் ஐந்தே.

[குறில் எனவும்படும்.]

**4. LONG VOWELS.**

ச. நெட்டெழுத்துக்கள் எவை?

ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ நெட்டெழுத்தேழே.

[நெடில் எனவும் படும்.]

**5. DEMONSTRATIVELETTERS.**

ரு. சுட்டெழுத்துக்கள் எவை?

சொல்லுக்கு முதலில், பொருள்களைக் குறித்துக் காட்டும் அர்த்தத்திலே, தனித்து நிற்கும் அ, இ, உ, சுட்டெழுத்துக்கள் என்றும் பெயர் பெறும்.

☞ அகரந் தூரத்தில் இருக்கிற பொருளையும், இகரஞ் சமீபத்தில் இருக்கிற பொருளையுஞ், செய்யுளிலே மாத்திரம் வழங்கிய உகரம் பின் நிற்கும் பொருளையுங் காட்டும்.

(உதாரணம்.) அவன், இது, உவன்: மொழிக்கு உறுப்பாய் வந்தன. அம்மனிதன், இவ்வீடு, உவ்விடம்: மொழியைச் சார்ந்துவந்தன.

**6. INTERROGATIV ELETTERS.**

சா. வினா எழுத்துக்கள் எவை?

ஆ, எ, ஏ, ஓ எனவும், யா என்னும் உயிர் மெய்யெழுத்தும், வினா எழுத்துக்கள் என்றும் பெயர் பெறும். இவற்றுள், எ, யாமொழி முதலிலும், ஆ, ஓ மொழி இறுதியிலும், ஏ இரண்டிடத்திலும் வரும்.

(உ-ம்.) அவனு, எவன், எது, இவனே, மரமோ, யாவை.

**7. CONSONANTS.**

௭. மெய்யெழுத்துக்கள் எவை?

க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன் இப்பதினெட்டும் மெய்யெழுத்துக்கள் ஆம்.

[ஒற்று, உடல், உடம்பு, அல் எனவும் படும்.]

**8. HARD LETTERS.**

அ. இவற்றுள், வல்லெழுத்துக்கள் எத்தனை?

க, ச, ட, த, ப, ற, என வல்லெழுத்துக்கள் ஆறும்.

[வன்கணம் எனவும், வன்மை, எனவும், வல்லினம், எனவும் படும்.]

**9. SOFT LETTERS NASALS.**

௯. மெல்லெழுத்துக்கள் எத்தனை?

ங, ஞ, ண, ந, ம, ன, என மெல்லெழுத்தாறும்.

[மென் கணம் எனவும் மென்மை எனவும் மெல்லினம் எனவும் படும்.]

**10. MEDIAL LETTERS.**

௰. இடை எழுத்துக்கள் எத்தனை?

ய, ர, ல, வ, ழ, ள, என இடையெழுத்துக்கள் ஆறும்.

[இடைக்கணம், எனவும், இடைமை எனவும், இடையினம் எனவும் படும்.]

**11. PRIMARY AND SECONDARY LETTERS.**

௰க. இவ்வற்றிற்கு வேறே பெயரும் உண்டோ?

தலையான எழுத்தாகும் உயிர் பன்னிரண்டும், மெய் பதினெட்டும் ஆகிய முப்பதும் முதல் எழுத்துக்கள் என்றும் பெயர் பெறும்; மற்றைய எல்லா எழுத்துக்களும் சார்பெழுத்துக்கள் எனப்படும்.

**12. THE GUTTURAL.**

௧௨. ஆய்தம் ஆவதென்ன?

சிலவிடத்தில் உயிர்போலவும், சிலவிடத்தில் மெய்போலவும் ஒலித்து, உயிரும் ஆகாமல், மெய்யும் ஆகாமல், தனி நிலையாய் வருகிற ஓர் எழுத்தாம். இது குற்றெழுத்துக்கும் வல்லெழுத்துக்கும் நடுவே வரும்.

[அதற்கு வடிவு ஃ, அல்லது கூ.]

(உ-ம்.) இஃது, அஃறிணை.

**13. VOWEL CONSONANTS.**

௧௩. உயிர் மெய்யெழுத்துக்கள் எவை?

பதினெட்டு மெய் மேலும் பன்னிரண்டு உயிருந் தனித்தனி ஏறிவருதலால் தோன்றிய இருநூற்றுப் பதினாறும் உயிர் மெய்யெழுத்துக்கள் ஆம்.

(உ-ம்.) ககர மெய்யாகிய க் என்பதன்மேல்
அகரம் ஏற க எனவும்,
ஆகாரம் ஏற கா எனவும்,
இகரம் ஏற கி எனவும் வரும்.
மற்றையவும் இவ்வாறே.

**14. PROLONGATION OF SOUND.**

௧௪. அளபெடை என்பதியாது?

செய்யுளில் ஓசை குறைந்தவிடத்து எழுத்தை நீட்டிச் சொல்வதே அளபெடை என்னும். இது உயிரளபெடை என்றும், ஒற்றளபெடை என்றும், இருவகை ஆம்.

(உ-ம்.) ஓதல் எ-தற்கு ஓ ஓதல் என நெட்டெழுத்தே,டே அதற்கு இனமான குற்றெழுத்து வந்ததும்; எடுப்பதும் எ - தற்கு எடுப்பதூஉம் எனக் குறிலே நெடிலாகிப் பின்னர் அளபெடுத்ததும்; சங்கு எ-தற்கு சங்ங்குஎன ஒற்றெழுத்து அளபெடுத்ததுங் காண்க.

**15. ABBREVIATED உ.**

கரு. குற்றியல் உகரம் என்பதியாது?

தனிக்குறிலொழிய மற்றைய எழுத்தின் கடையில் கு, சு, டு, து, பு, று வரில் அவ் வல்லெழுத்தின்மேல் இருக்கும் உ குற்றியல் உகரம் என்னப்படும்.

(உ-ம்.) நாகு, காசு, மாடு, வாது,

என நெடிற்றொடர் மொழிக்குற்றியல் உகரம்;
எஃது, கஃசு, எ-ன ஆய்தத்தொடர் மொழிக்குற்றியல் உகரம்;
வரகு, பலாசு எ-ன உயிர்த்தொடர் மொழிக்குற்றியல் உகரம்;
எழுத்து, காற்று எ-ன வன்றொடர் மொழிக் குற்றியல் உகரம்;
குரங்கு, பண்பு எ-ன மென்றொடர் மொழிக்குற்றியல் உகரம்;
சால்பு, வெய்து எ-ன இடைத்தொடர் மொழிக்குற்றியல் உகரம்.

இவற்றின் கடைசியில் இருக்கும் உ குற்றியலுகரம் ஆம்.

☞ மற்றைய உகரம் முற்றுகரம் எனப்படும்.

### 16. QUANTITY.

கசு. மாத்திரை ஆவ தென்ன?

கண்ணிமைப் பொழுதும, கைந்நொடிப்பொழுதும் மாத்திரை என்னப்படும்.

☞ ஒற்றுக்கும், குற்றிய லிகரத்திற்கும், குற்றியலுகரத்திற்கும் அரைமாத்திரையும், குறிலுக்கு ஒரு மாத்திரையும், நெடிலுக்கு இரு மாத்திரையும், உயிர் அளபெடைக்கு மூன்று மாத்திரையும் அளவாம்.

### 17. INTERCHANGE.

கஎ. போலி என்ப தென்ன?

ஔ காரத்திற்கு அவ் எனவும்,
ஐ காரத்திற்கு அய் எனவும்,
நகரத்திற்கு ஞ எனவும்,
லகரத்திற்கு ர் எனவும்,
மொழியீற்று மகரத்திற்கு ன் எனவும்,
குற்றிய லுகரத்திற்கு அர் எனவும்,
அகரத்திற்கு ஐ எனவும்,
வந்து ஒத்து நடப்பது போலி என்றும்.

(உ-ம்.) ஔவியம் — அவ்வியம்; வையம் — வய்யம்;
நண்டு — ஞண்டு; கலம் — கலன்;
மயல் — மையல்; குடல் — குடர்;
அரும்பு, — அரும்பர்; இன்பம், — இன்பு,

### 18. SANSCRIT LETTERS.

கஅ. தமிழிலே வழங்கி வரும் வடஎழுத்துக்கள் எவை?

க்ஷ, ஷ, ஸ, ஜ, ஹ முதலியவுஞ் சிலவிடத்து வரும்.

(உ-ம்.) பக்ஷம் - இது தமிழிலே பட்சம் எனவும், பக்கம் எனவும் வழங்கும்.

பாஷை............ பாடை.
புஸ்தகம்............ புத்தகம்.
கஜம் ................ கசம், கயம்.
மோஹம்........... மோகம்.
ஹானி .............. ஆனி.

# உ. எழுத்துப் புணரியல்.

## II. COMBINATIONS OF LETTERS.

**19. CHANGES OF LETTERS.**

கக. விகாரம் என்பது என்ன?

மொழியோடு மொழி, வேற்றுமை வழியிலாவது, அல் வழியிலாவது, பொருந்தும்பொழுது நிலைமொழியின் ஈற்றெழுத்தாகிலும், வருமொழியின் முதலெழுத்தாகிலும், அவ்விரண்டெழுத்துகளும் ஆகிலுந் திரிவதுங் கெடுவதும் வேறே எழுத்துத் தோன்றுவதுமே விகாரம் என்னப்படும்.

**20. KINDS OF CHANGE.**

உ௦. அவ்விகாரம் எத்தனை வகை ஆம்?

தோன்றல், திரிதல், கெடுதல் என மூவகை ஆம்.

இவற்றுள்,

(க) இல்லாத விடத்து எழுத்து உண்டாகுவது தோன்றல்:

(உ-ம்.) என் + இடத்தில் = என்னிடத்தில், என்பதி ல் ன் தோன்றியது தோன்றல் விகாரம்.

(உ) ஒரெழுத்து மற்றோரெழுத்தாக மாறுவது திரிதல்:

(உ-ம்.) பால் + குடம் = பாற்குடம், என்பதில் லகரம் றகரமாக மாறியது திரிதல் விகாரம்.

(ந) இருக்கிற இடத்து ஒரெழுத்து மறைவது கெடுதல்:

(உ-ம்.) மரம் + வீடு = மரவீடு, என்பதில் மகரம் மறைந்தது கெடுதல் விகாரம்.

**21. INFLECTED COMBINATION.**

உக. வேற்றுமைச்சந்தி ஆவதென்ன?

நிலைமொழியின் இறுதியிலே, ஐ, ஆல், கு, இன், அது, கண், என்னும் உருபுகள் தொக்கும் விரிந்தும் வரப் புணர்வது வேற்றுமைச் சந்தி ஆம்.

(உ-ம்.) கல்லெறிந்தான், கல்லாலெறிந்தான்; மரத்தை வெட்டினன் மரம் வெட்டினன், என்பதில் ஆல், ஐ, என்னும் வேற்றுமை உருபுகள் வெளிப்பட்டும் வெளிப்படாமல் மறைந்தும் வரப் பொருந்தியது.

கொற்றன் மகன். மலைவீழ் அருவி. சாத்தன்கை. மலை நெல்.

**22. UNINFLECTED COMBINATION.**

உஉ. அல்வழிச்சந்தி ஆவதென்ன?

வேற்றுமை யல்லாத வழியில் நிலைமொழியும் வருமொழியும் புணர்வது அல்வழிச்சந்தி ஆம்.

(உ-ம்.) வந்த மனிதன்.

## § க. உயிரீற்றுப் புணரியல்.

### 23. VOWEL BEFORE VOWEL.

உங. உயிரெழுத்துக்குப்பின் உயிர் வந்தால் எவ்வாறும்?

(க) இ, ஈ, ஐ என்னும் எழுத்துக்குப் பின் உயிர் வந்தால் இடையிலே யகரவொற்றுத் தோன்றும்.

(உ-ம்.) மணி + அழகு = மணியழகு.
தீ + எரியும் = தீயெரியும்.
மலை + அருவி = மலையருவி.

(உ) ஏ என்னும் எழுத்துக்குப் பின் உயிர் வந்தால் வகர ஒற்றும், யகர ஒற்றுந் தோன்றும்.

(உ-ம்.) நானே + அரசன் = நானேயரசன்.
சே + ஏறி = சேவேறி.

(ங) மற்ற உயிராகிய அ, ஆ, உ, ஊ, எ, ஒ, ஓ, ஔ என்னும் எழுத்துக்குப் பின் உயிர் வந்தால் வகர ஒற்றுத் தோன்றும்.

(உ-ம்.) மக + அரிது = மகவரிது.
பலா + அருமை = பலாவருமை.
திரு + உளம் = திருவுளம்.
பூ + அணை = பூவணை.
எ + அன் = எவன்.
நொ + அதிகம் = நொவதிகம்.
கோ + அழகு = கோவழகு.
கௌ + அழகு = கௌவழகு.

☞ (க) இடையிலே வரும் யகரமும் வகரமும் உடம்படுமெய் என்னப்படும்.

(உ) உலகவழக்கில் உடம்படுமெய் இன்றியும் வழங்கும்.

---

**24 உ BEFORE A VOWEL OR ய.**

உச. தனிக்குறில் அணையாத உகரத்துக்குப் பின் உயிர் ஆவது யகரம் ஆவது வரில் எவ்வாறும்?

உயிர் வந்தால் உகரங் கெடும்; யகரம் வந்தால் உகரங் கெட இகரந் தோன்றும்; அவ்வாறு தோன்றிய இகரங் குற்றியலிகரம் எனப்படும்.

(உ-ம்.) செய்வது + அரிது = செய்வதரிது.
என்பது + யாது = என்பதியாது.

**25. ANY LETTER AFTER A DEMONSTRATIVE OR INTERROGATIVE LETTER.**

உரு. சுட்டெழுத்துக்குப்பின்னும், எகர வினாவெழுத்துக்குப் பின்னும் மெய்யெழுத்து வந்தால் எவ்வாறும்? உயிர் எழுத்து வந்தால் எவ்வாறும்?

அந்த மெய் எழுத்து இரட்டிக்கும்; யகரம் வரில் வகரந் தோன்றும்; உயிர் வந்தால் வகரந் தோன்றும்.

(உ-ம்.) அ + மனிதன் = அம்மனிதன்.
இ + பொழுது = இப்பொழுது.
எ + வகை = எவ்வகை.
எ + இடம் = எவ்விடம.
அ + யானை = அவ்யானை.
அ + உயிர் = அவ்வுயிர்.

**26. WORD IN டு AND று MAKE ட்டு AND ற்று.**

உசா. தனிக்குறிலணையாத டு, று நிலைமொழியினீற்றில் வரும்பொழுது எவ்வாறும்?

வேற்றுமை வழியில் பெரும்பாலும் ட், ற் இரட்டிக்கும். அல்வழியில் சிலவிடத்து இரட்டிக்கும்.

(உ-ம்.) ஆடு + கால் = ஆட்டுக்கால்.
ஆறு + மீன் = ஆற்றுமீன்.
குருடு + கண் = குருட்டுக்கண்.
மலடு + பசு = மலட்டுப்பசு.
வயிறு + வலி = வயிற்றுவலி.

---

அன்றியும், எருது + தோல் = எருத்துத்தோல்.
வெருகு + கண் = வெருக்குகண் என சிலவிடத்து த், க், இரட்டித்துவரும்.

**27. க, ச, த, ப DOUBLED.**

உஎ. உயிருக்குப்பின் க, ச, த, ப, வரில் எவ்வாறும்?

உயிருக்குப் பின் வரும் க, ச, த, ப, பெரும்பாலும் இரட்டிக்கும்.

(உ-ம்.) மற்ற + காரியம் = மற்றக்காரியம்.
இந்த + சத்தம் = இந்தச்சத்தம்.
வாங்கி + தருவேன் = வாங்கித்தருவேன்.
சாரை + பாம்பு = சாரைப்பாம்பு.

---

☞ ஆகிலும், விளிப்பெயருக்கும், விளிப்பெயருக்கும், அஃறிணைப்பெயருக்கும், வினை முற்றுக்கும், பெயர் எச்சத்துக்கும், வினைத்தொகைக்கும், அது இது இவை அவை பல சில நீ ஒரு சிறு அறு எழு என்பவைகளுக்கும், மூன்றும் ஆறும் வேற்றுமையின் உருபுக்கும், உயிரீற்று உயர்திணைப் பெயருக்கும், பொதுப்பெயருக்கும், முன் வரும் க, ச, த ப, இயல்பாம்.

(உ-ம்.) அவனு கொடுத்தான். அண்ணு கொடும். செய்தை தம்பி.
ஓடின குதிரை. குளிர்காற்று. அது பெரிது. சாத்தனோடு கொண்டான்.
எனது தலை. தம்பி கை. நம்பி தந்தான்.

**28. NEUTER PLURALS IN அ TAKE THE INCREMENT அற்று.**

உஅ. அகரவீற்று அஃறிணைப் பன்மைப் பெயர் முன், வேற்றுமைவழியில், மெய்வரில் எவ்வாறும்?

இடையில் அற்றுச் சாரியை தோன்றும்.

(உ-ம்.) பல + ஐ = பலவற்றை.
சில + கு = சிலவற்றுக்கு.

---

## § உ. மெய்யீற்றுப்புணரியல்.

---

**29. THE FINAL CONSONANT IN A SHORT SYLLABLE BEFORE A VOWEL DOUBLED.**

உகூ. தனிக்குறிலணைந்த ஒற்றின்முன் உயிர் வந்தால் எவ்வாறும்?

அவ்வொற்றெழுத்து இரட்டிக்கும்.

(உ-ம்.) மண் + அழகு = மண்ணழகு.

**30. LETTERS DOUBLED AFTER ய், ர், ழ்.**

௩௰. ய், ர், ழ் என்னும் எழுத்தின் எவ்வெழுத்துக்கள் மிகும்?

(க) அடைமொழிகளினீற்றிலிருக்கும் ய், ர், ழ் என்னும் ஒற்றின் பின் வல்லினம் மிகும்.

(உ-ம்.) பொய் + செல்வம் = பொய்ச் செல்வம்.
பாழ் + கொல்லை = பாழ்க்கொல்லை.
கார் + பருவம் = கார்ப்பருவம்.

(உ) வேற்றுமைவழியில் அவற்றின்பின் வல்லினம் மிகும்.

(உ-ம்.) நாய் + கால் = நாய்க்கால்.
யாழ் + கால் = யாழ்க்கால்.
நீர் + குமிழி = நீர்க்குமிழி.

(ரு) போய், ஆய் என்னும் வினையெச்சங்களுக்குப்பின் வல்லினம் மிகும்.

(உ-ம்.) போய், + சொன்னான் = போய்ச்சொன்னான்.
ஆய் + போயிற்று = ஆய்ப்போயிற்று.

**31. ஞ, ம, ந DOUBLED.**

ருக. ஞ, ம, ந எப்பொழுது இரட்டிக்கும்?

குற்றெழுத்தைச் சேர்ந்த யகரத்தின் முன்னும், தனி ஐகாரத்தின்முன்னும் ஞ, ம, ந இரட்டிக்கும்.

(உ-ம்.) மெய் + ஞானம் = மெய்ஞ்ஞானம்.
கை + மாற்று = கைம்மாற்று.
செய் + நன்றி = செய்ந்நன்றி.

**32. CHANGES OF FINAL ம் INTO ங், ஞ் AND ந.**

ருஉ. மொழியீற்று மகரம் எவ்வாறு திரியும்?

மொழியீற்று மகரமானது ககர சகரங்கள் வரில் முறையே ஙகரமாகவும், ஞகரமாகவுந், தகர நகரங்கள் வரில் நகரமாகவுந் திரியும்.

(உ-ம்.) மனம் + களித்தது = மனங்களித்தது.
மரம் + சாய்ந்தது = மரஞ்சாய்ந்தது.
பாவம் + தீயது = பாவந்தீயது.
செம் + நெல் = செந்நெல்.

**33. FINAL ம் DISAPPEARS.**

ருரு. மொழியீற்று மகரங்கெடுவதும் உண்டோ?

மகரத்தின் முன்னும், நகரத்தின் முன்னுங் குறிலணையாத மொழியீற்று மகரங் கெடும்.

(உ-ம்.) காலம் + நெடிது = காலநெடிது.
மரம் + மெல்லியது = மரமெல்லியது.

**34. CHANGES OF FINAL ண் AND ள் INTO ட்.**

நச. மொழியீற்று ணகரமும் ளகரமும் எவ்வாறு திரியும்?

மொழியீற்று ணகரமும், ளகரமும் வேற்றுமை வழியிற், ககர சகர பகரங்கள் வரில் டகரமாம்.

(உ-ம்.) மண் + குடம் = மட்குடம்.
மண் + சாடி = மட்சாடி.
மண் + பானை = மட்பானை.
முள் + கூர்மை = முட்கூர்மை.
கள் + சொரிந்தான் = கட்சொரிந்தான்.
முள் + புறம் = முட்புறம்.

**35. CHANGES OF FINAL ன் AND ல் INTO ற்.**

நரு. மெழியீற்று னகரமும் லகரமும் எவ்வாறு திரியும்?

மொழியீற்று னகரமும், லகரமும் வேற்றுமை வழியிற், ககர சகர பகரங்கள் வரில் றகரமாம்.

(உ-ம்.) பொன் + குடம் = பொற்குடம்.
பொன் + சாடி = பொற்சாடி.
பொன் + பானை = பொற்பானை.
கல் + கூடம் = கற்கூடம்.
விரல் + சிறிது = விறற்சிறிது.
விரல் + புறம் = விரற்புறம்.

**36. CHANGES OF FINAL ல் AND ள் INTO ன் AND ண்.**

நசா. மொழியீற்று லகரமும் ளகரமும் மகரம் வரில் எவ்வாறும்?

மொழியீற்று லகரமும், ளகரமும் மக ரம்வரில் முறையே னகரமும், ணகரமும் ஆம்.

(உ-ம்.) கல் + மலை = கன்மலை.
முள் + முடி = முண்முடி.

**37. CHANGES OF FINAL ண் AND ள் WITH த் INTO ட்ட.**

௩எ. ணகரத்திற்கும் ளகரத்திற்கும் முன் தக ரம் வரில் எவ்வாறும்.

(க) ணகரத்திற்கும், ளகரத்திற்கும் மு ன் தகரம் வரில் வேற்றுமை வழியிற் பெரு ம்பாலும் இரண்டும் டகரமாகும்.

(உ-ம்.) மண் + திமை = மட்டிமை.
முள் + தீது = முட்டீது.

(உ) சிலவிடத்து இருவழியிலுந் தக ரம் டகரம் ஆம்.

(உ-ம்.) கண் + திறந்தான் = கண்டிறந்தான்.

(௩) ஒருடகரங் கெடுதலும் உண்டு.

(உ-ம்.) நாள் + தோறும் = நாடோறும்.
தங்கள் + தலைமை = தங்கடலைமை.

**38. CHANGES OF FINAL ல் AND ன் WITH த் INTO ற்.**

௩அ. னகரத்திற்கு முன்னும், லகரத்திற்கு மு ன்னுந் தகரம் வரில் எவ்வாறும்?

(க) னகரத்தின் முன்னும், லகரத்தின் முன்னும் தகரம் வரில் வேற்றுமை வழி யில் இரண்டும் றகரமாம்.

(உ-ம்.) பொன் + தீமை = பொற்றீமை.
கடல் + திரை = கடற்றிரை.

☞ நல் + தாள் = நற்றாள்.

எ-தில். அல்வழியிலும் இரண்டும் றகரம் ஆயின.

(உ) அல்வழியிற் சிலவிடத்து தகரம் றகரம் ஆம்.

(உ-ம்.) பொன் + தீது = பொன்றீது.

(ந) ஒரு றகரங் கெடுதலும் உண்டு.

(உ-ம்.) பால் + தீது = பாறீது.

**39. CHANGE OF ல் AND ந் INTO ன்ன AND OF ள் AND ந் INTO ண்ண.**

ந௯. லகரத்தின் முன்னும், ளகரத்தின் முன்னும் நகரம் வரில் எவ்வாறும்.

(க) லகரத்தின் முன்னும், ளகரத்தின் முன்னும் நகரம் வரில் முறையே இரண்டும் னகரமும், ணகரமும் ஆம்.

(உ-ம்.) நல் + நெறி = நன்னெறி.
தெள் + நீர் = தெண்ணீர்.

(உ) ஓர் னகரமும், ணகரமுங் கெடுதலும் உண்டு.

(உ-ம்.) வானத்தில் + நின்று = வானத்தினின்று.
அருள் + நலம் = அருணலம்.

**40. CHANGE OF ந INTO ன் AND ண் AFTER THOSE LETTERS.**

சo. ணகரத்திற்கும் னகரத்திற்கும் முன் மொழி முதல்நகரம் எவ்வாறும்?

(க) தனிக்குறிலணைந்த ணகரத்தின் முன்னும், னகரத்தின் முன்னும், நகரம் முறையே ணகரமாகவும், னகரமாகவுந் திரியும்.

(உ-ம்.) கண் + நீர் = கண்ணீர்.
தன் + நலம் = தன்னலம்.

(உ) தனிக்குறிலணையாத ணகரத்திற்கும், னகரத்திற்கும் முன் நகரங் கெடும்.

(உ-ம்.) கவண் + நெடிது = கவணெடிது.
கலன் + நெடிது = கலனெடிது.

## § ரு. செய்யுள் விகாரங்கள்.

**41. POETICAL CHANGES.**

சக. செய்யுள் விகாரங்கள் எவை?

(க) வலித்தல்; அதாவது, மெல்லினத்தை வல்லினம் ஆக்கல்.

(உ-ம்.) துறுந்தாள் எ-து துறுத்தாள் எனவும் வரும்.
ஈந்து எ-து ஈத்து.

(உ) மெலித்தல்; அதாவது, வல்லினத்தை மெல்லினம் ஆக்கல்:

(உ-ம்.) புத்தி எ-து புந்தி எனவும்வரும்.
தட்டை எ-து தண்டை,

(ரு) நீட்டல்; அதாவது, குற்றெழுத்தை நெட்டெழுத்தாக்கல்:

(உ-ம்.) நிழல் எ-து நீழல் எனவும் வரும்.
பொழுது எ-து போழ்து.

(ச) குறுக்கல்; அதாவது, நெட்டெழுத்தைக் குற்றெழுத்தாக்கல்:

(உ-ம்.) பாதம் எ-து பதம் எனவும் வரும்,
தீயேன் எ-து தியேன்,

(ரு) விரித்தல்; அதாவது, இல்லாத எழுத்தை வருவித்தல்:

(உ-ம்.) மக எ-து மகவு எனவும்,
விளையுமே எ-து விளையும்மே, எனவும் வரும்.

(சா) தொகுத்தல்; அதாவது, உள்ள எழுத்தை நீக்கல்:

(உ-ம்.) தோழாதார் எ-து தோழார் எனவும்,
இல்லாதவன் எ-து இல்லாதான் எனவும்,
இல்லான் எனவும் இலான் எனவும் வரும்.

(எ) முதற்குறை; அதாவது, முதலெழுத்தை நீக்கல்:

(உ-ம்.) தாமரை எ-து மரை எனவும் வரும்.

(அ) இடைக்குறை; அதாவது, இடையெழுத்தை நீக்கல்:

(உ-ம்.) ஓந்தி எ-து ஓதி எனவும்,
அகங்கை எ-து அங்கை எனவும் வரும்.

(கூ) கடைக்குறை; அதாவது, கடையெழுத்தை நீக்கல்:

(உ-ம்.) நீலம் எ-து நீல் எனவும்,
அரவம் எ-து அரவு எனவும், அரா எனவும்,
நிலா எ-து நிலவு எனவும், இவைபோல்வனவும் வரும்.

---

## § ச. வடமொழிச் சந்தி.

---

**42. SANSCRIT CHANGES.**

சஉ. வடமொழிகள் தமிழிலே ஒன்றோடொன்று பொருந்தும் பொழுது வடநூலின் சந்தியைப் பெறுமோ?

வடநூலின் சந்தியைப் பெறுவதும் உண்டு. அவற்றின் விவரமாவது:

---

### க. தீர்க்க சந்தி. (௩.)

(க) அ, ஆ முன், அ, ஆ இரண்டும் ஆகாரம் ஆம்:

(உ-ம்.) தேவ + ஆலயம் = தேவாலயம்.
சேநா + அதிபதி = சேநாதிபதி.
ஞான + அமிர்தம் = ஞானாமிர்தம்.
சதா + ஆநந்தம் = சதாநந்தம்.

(உ) இ, ஈ முன், இ, ஈ வரில் இரண்டும் ஈகாரம் ஆம்:

(உ-ம்.) கிரி + ஈசன் = கிரீசன்.
முனி + இந்திரன் = முனீந்திரன்.
மகி + ஈசன் = மகீசன்.

(௩) உ, ஊ முன், உ, ஊ வரில் இரண்டும் ஊகாரம் ஆம்:

(உ-ம்.) குரு + உபதேசம் = குரூபதேசம்.
தரு + ஊனம் = தரூனம்.

---

### உ. குண சந்தி. (உ.)

(ச) அ, ஆ முன், இ, ஈ வரில் இரண்டும் ஏகாரம் ஆம்:

(உ-ம்.) சர்வ + ஈசுரன் = சர்வேசுரன்.
தரா + இந்திரன் = தரேந்திரன்.
மகா + ஈசன் = மகேசன்.

(ரு) அ, ஆ முன், உ, ஊ வரில் இரண்டும் ஓகாரம் ஆம்:

(உ-ம்.) ஞான + உபதேசம் = ஞானோபதேசம்.
மந்திர + ஊகி = மந்திரோகி.
தயா + ஊர்ச்சிதன் = தயோர்ச்சிதன்.

---

ந. விருத்தி. சந்தி. (உ.)

(சு) அ, ஆ முன், ஏ, ஐ வரில் இரண்டும் ஐகாரம் ஆம்:

(உ-ம்.) ஞான, + ஐக்கியம் = ஞானைக்கியம்.
தரா, + ஏகவீரன் = தரைகவீரன்.

(எ) அ, ஆ முன், ஒ, ஓ வரில் இரண்டும் ஔகாரம் ஆம்:

(உ-ம்.) தின + ஓதனம் = தினௌதனம்.

---

## இரண்டாவது சொல்லதிகாரம்.

## II. ETYMOLOGY.

**43. PARTS OF SPEECH.**

சரு. தமிழ்ச்சொற்கள் எத்தனை வகையாம்?

பெயர், வினை, இடை, உரி என நான்கு வகை ஆம்.

**44. NOUN.**

சச. பெயர்ச்சொல் ஆவதென்ன?

ஒரு பொருளின் பெயரைக் காட்டுவது பெயர்ச்சொல் ஆம்.

(உ-ம்.) மனிதன். மனைவி. வீடு.
நன்மை. தீமை.
செய்தவன். வருவது.

**45. VERB.**

சரு. வினைச்சொல் ஆவதென்ன?

ஒரு பொருளின் தொழிலைக் காட்டுவது வினைச்சொல் ஆம்.

(உ-ம்.) இரு, வந்தான், படிக்கிறார்கள்.

**46. PARTICLE.**

சகூ. இடைச்சொல் ஆவதென்ன?

தனித்து வழங்குதலின்றிப் பெயர் வினைகளை அடுத்து வருவது இடைச்சொல் ஆம்.

(உ-ம்) அதுவே என்பதில் ஏ என்பதும்; அவனும் இவனும் என்பதில், உம் என்பதும் இடைச்சொற்கள் ஆம்.

**47. QUALIFYING WORD; ADJECTIVE OR ADVERB.**

சஎ. உரிச்சொல் ஆவதென்ன?

பெயர்ச்சொல்லையும், வினைச்சொல்லையுந் தழுவி அவைகளுக்குரிய குணத்தைக் காட்டுவது உரிச்சொல் ஆம்.

(உ-ம்.) பெரிய அரசன்.
மிகவும் உழைத்தான்.
இவற்றில் பெரிய என்பதும், மிகவும் என்பதும் பெயரையும் வினையையுந் தழுவிய உரிச்சொற்கள் ஆம்.

---

## க. பெயரியல்.

**48. CLASSES OF NOUNS.**

சஅ. பெயர்ச்சொல் எத்தனை வகை ஆம்?

இடுகுறிப்பெயர் என்றுங் காரணப்பெயர் என்றும் இரண்டு வகை ஆம்.

**49. ARBITRARY NOUNS.**

சகூ. இடுகுறிப்பெயர் ஆவதென்ன?

மரம், மலை என்பவற்றைப்போல் ஒரு நிமித்தமும் இன்றி வருவது இடுகுறி என்பதாம்.

(உ-ம்.) நிலம், கடல், ஆறு, சோறு.

**50. APPELLATIVE NOUNS.**

ருo. காரணப்பெயர் ஆவதென்ன;

கணக்கு எழுதுகிறவனைக் "கணக்கன்" என்று ஒரு நிமித்தம் பற்றி வழங்குவது காரணப் பெயர் ஆம்.

(உ-ம்.) வில்லன், கொங்கன், இன்றையான், நெடுங்கையான், நல்லன், ஈவான்.

**51. CHARACTERISTICS OF NOUNS.**

ருக. பெயர்ச்சொல்லில் எத்தனை பொருளை அறிய வேண்டும்?

பெயர்ச்சொல்லில் திணை, பால், இடம், வேற்றுமை என நான்கு பொருளையும் அறியவேண்டும்.

**52. CLASS: PERSONAL AND IMPERSONAL NOUNS.**

ருஉ. திணை என்பது எத்தனை வகை ஆம்.

உயர்திணை, அஃறிணை என இருவகையாம்.

தேவர், மனிதர், நரகர் உயர்திணை ஆம் மற்றைய பெயர் எல்லாம் அஃறிணை ஆம்.

**53. GENDER AND NUMBER.**

ருங. பால் என்பது எத்தனை வகை ஆம்?

உயர்திணை ஆகிய ஆண்பால், பெண்பால், பலர்பால் என மூன்றும்; அஃறிணை ஆகிய ஒன்றன்பால், பலவின்பால் என இரண்டும்: ஆக ஐந்துவகை ஆம்.

இவற்றுள், ஆண்பால், பெண்பால், ஒன்றன்பால் ஆகிய மூன்றும் ஒருமை என

வும்; பலர்பால், பலவின்பால் ஆகிய இரண்டும் பன்மை எனவும் படும்.

(உ-ம்.)

| | ஒருமை. | பன்மை. |
|---|---|---|
| உயர்திணை | (க) ஆண்பால் அரசன். (உ) பெண்பால் மனைவி. | (௩) பலர்பால் புலவர். |
| அஃறிணை. | (௪) ஒன்றன்பால் வீடு. | (ரு) பலவின்பால் மரங்கள். |

**54. PERSON.**

ருச. இடம் ஆவது எத்தனை?

தன்மை, முன்னிலை, படர்க்கை என மூவிடமே.

இவற்றுள், (க) தன்னைத்தானே குறித்தது தன்மை இடம்:

(உ-ம். { ஒருமை நான், அடியேன்.
பன்மை நாம், அடியேம்.

(உ) முன் நின்றவனைப் பார்த்துப் பேசுவது முன்னிலை:

(உ-ம்.) { ஒருமை நீ, கோடியாய்.
பன்மை நீங்கள், தேவரீர்.

(௩) மற்றப் பொருளைக் குறித்துக் காட்டுவது படர்க்கை:

(உ-ம்.) { ஒருமை அவன், மனிதன், வீடு.
பன்மை அவர்கள், மனிதர், வீடுகள்.

**55. CASE.**

ருரு. வேற்றுமை ஆவது என்ன?

பெயரின் இயல்பை வேறுபடுத்துவதே ஆம். அது எட்டுவகை ஆம்.

**56. 1ST OR NOMINATIVE CASE.**

ருசு. முதல் வேற்றுமை எது?

திரிபில்லாத பெயரின் இயல்பே முதல் வேற்றுமை எனவும், எழுவாய் எனவும் படும்.

(உ-ம்.) மனிதன். மனைவி. வீடு. மனிதர்கள். வீடுகள்.

**57. SIGNS OF THE NOMINATIVE.**

ருஎ. எழுவாயைக் குறித்துக் காட்டுகிற சொல்லுருபுகள் எவை?

ஆனவன், ஆனவள், ஆனது, ஆனவர், ஆனவர்கள், ஆனவை; என்பவன், என்பவள், என்பது, என்பவர், என்பவர்கள், என்பவை, முதலிய சொல்லுருபுகள் எழுவாயைக்குறித்துக் காட்டும்.

(உ-ம்.) இராசாவானவர் வந்தார்.
பொன்னன் என்பவன் வந்தான்.

☞ இவை மற்ற வேற்றுமைகளின் உருபுகளையும் பெற்று வருவதும் உண்டு.

**58. 2D OR ACCUSATIVE CASE.**

ருஅ. இரண்டாம் வேற்றுமையின் உருபு என்ன?

இரண்டாம் வேற்றுமையின் உருபு ஐ என்பதே ஆம்.

இதின் பொருள் செயப்படுபொருளே.

(உ-ம்.)

| பெயர். | உருபு. | இரண்டாம் வேற்றுமை. |
|---|---|---|
| மனிதன், | ஐ. | மனிதனை உண்டாக்கினார். |
| தந்தை, | ஐ. | தந்தையைக் கனம் பண்ணினான். |
| கல், | ஐ. | கல்லைப் புரட்டினான். |
| பூ, | ஐ. | பூவை அணிந்தான். |
| கண், | ஐ. | கண்ணைக் குத்தினான். |
| மரம், | ஐ. | மரத்தை வெட்டினான். |
| ஆறு, | ஐ. | ஆற்றைக் கடந்தான். |
| வீடு, | ஐ. | வீட்டைக் கட்டினான். |
| நிலங்கள், | ஐ. | நிலங்களை வாங்கினான். |

**59. 3D OR INSTRUMENTAL ABLATIVE.**

௫௯. மூன்றாம் வேற்றுமையின் உருபுகள் எவை?

மூன்றாம் வேற்றுமையின் உருபுகள் ஆல், ஆன், ஒடு, ஓடு, உடன், கொண்டு, என்பவை ஆம்.

இவற்றின் பொருள் ஏது, உடனிகழ்ச்சி என இரண்டாம்.

(உ-ம்.)

| பெயர். | உருபு. | மூன்றாம் வேற்றுமை. | பொருள். |
|---|---|---|---|
| மண் | ஆல், ஆன். | மண்ணால் / மண்ணான் ஒருகுடத்தை வனைந்தான். | ஏது. |
| மந்திரி | ஒடு, ஓடு. | மந்திரியொடு / மந்திரியோடு அரசன் வந்தான். | உடனிகழ்ச்சி. |
| அவன் | உடன். | அவனுடன் மற்றவர்களுமிருப்பார்கள். | உடனிகழ்ச்சி. |
| வாள் | கொண்டு. | வாள்கொண்டு வெட்டினான். | ஏது. |

### 60. 4TH OR DATIVE CASE.

சாய. நான்காம் வேற்றுமையின் உருபு என்ன?

நான்காம் வேற்றுமையின் உருபு கு என்பதே ஆம்.

இதின் பொருள் கோடை, பகை, தகுதி, நிமித்தம் முதலியவையாம்.

(உ-ம்.)

| பெயர். | உருபு. | நான்காம் வேற்றுமை. | பொருள். |
|---|---|---|---|
| தரித்திரர் | கு. | தரித்திரருக்குப் பிச்சை கொடுத்தான். | கொடை. |
| வேதம் | கு. | வேதத்திற்கு விரோதமான காரியம். | பகை. |
| அரசர் | கு. | அரசர்க்கு ஆளுகை உரித்து. | தகுதி. |

நிமித்தப்பொருளிலே ஆக என்றும், நிமித்தம் என்றும், பொருட்டு என்றும் சொல்லுருபுகளாக வரும்.

(உ-ம்.) எனக்காகச் செய்தான்.
என்னிமித்தம் வந்தான்.
இதின் பொருட்டுப் போனான்.

### 61. 5TH OR ABLATIVE OF MOTION.

சாக. ஐந்தாம் வேற்றுமையின் உருபுகள் எவை?

ஐந்தாம் வேற்றுமையின் உருபுகள் இல், இன், என்பனவாம். சிலவிடத்து நின்று, இருந்து என்னும் சொல்லுருபுகளும் வரும்.

இவற்றின் பொருள் நீக்கல், ஒப்பு, எல்லை, ஏது முதலியவாம்.

(உ-ம்.)

| பெயர். | உருபு. | ஐந்தாம் வேற்றுமை. | பொருள். |
|---|---|---|---|
| மலை | இன். | மலையின் வீழருவி. | நீக்கல். |
| காக்கை | இல். | காக்கையிற் கரிதுகளம்பழம். | ஒப்பு. |
| மதுரை | இன். | மதுரையின் வடக்குச் சிதம்பரம். | எல்லை. |
| கல்வி | இல். | கல்வியிற் பெரியவன் கம்பன். | ஏது. |

### 62. 6TH OR GENITIVE CASE.

சஉ. ஆரும் வேற்றுமையின் உருபுகள் எவை?

ஆரும் வேற்றுமையின் உருபுகள் அது, ஆது, அ, உடைய என்பனவாம்.

இவற்றின் பொருள் கிழமைப் பொருள் ஆம்.

(உ-ம்.)

| பெயர். | உருபு. | ஆரும் வேற்றுமை. |
|---|---|---|
| தந்தை | அது. | தந்தையது கை. |
| தான் | ஆது. | தனது செவி. |
| தான் | அ. | தன கைகள். |
| தந்தை | உடைய. | தந்தையுடைய கட்டளை. |

### 63. 7TH OR LOCAL ABLATIVE.

சங. ஏழாம் வேற்றுமையின் உருபுகள் எவை?

ஏழாம் வேற்றுமையின் உருபுகள் இல், இன் என்பனவாம். இடத்தில் என்னும் சொல்லுருபும் வரும். கண், கால், அகம், புறம், உள், கீழ், மேல், முன், பின், சார், அயல், புடை, திசை, தேம், தலை, இடை, கடை, வலம், இடம், உழை, உழி, உளி,

வயின், வாய, பால், முதலியவும் ஏழாம் வேற்றுமையின் உருபுகளாகவும் வழங்கும்.

இவற்றின் பொருள் இடப்பொருள் ஆம்.

(உ-ம்.)

| பெயர். | உருபு. | ஏழாம் வேற்றுமை. |
|---|---|---|
| வீடு | இல் | வீட்டில் இருக்கிறான். |
| அரசன் | இடத்தில் | அரசனிடத்தில் வந்தான். |
| மணி | கண் | மணியின் கண் ஒளி. |

மற்றவையும் இவ்வாறே.

**64. 8TH OR VOCATIVE CASE.**

சுச. எட்டாம் வேற்றுமையின் உருபுகள் எவை?

எட்டாம் வேற்றுமையின் உருபுகள் பெயரின் ஈறு திரிதலும், கெடுதலும், மிகுதலும், இயல்பாதலும், ஈற்றயல் எழுத்துத் திரிதலும் ஆம்.

இவற்றின் பொருள் அழைக்கப்படும் பொருள் ஆம்.

☞ இது விளி வேற்றுமை எனவும் படும்.

(உ-ம்.)

| பெயர். | உருபு. | எட்டாம் வேற்றுமை. |
|---|---|---|
| அம்மை, பிள்ளை | ஈறு திரிவது. | அம்மா. பிள்ளாய். |
| அரசன் | ஈறு கெடுவது. | அரச. |
| மகன், தம்பி | ஈறு மிகுவது. | மகனே. தம்பீ. |
| தம்பி | ஈறு இயல்பாவது. | தம்பி |
| மக்கள் | ஈற்றயல் திரிவது. | மக்காள். |

**65. THE PARTICLE** இன்.

சுரு. இவ்வேற்றுமைகள் எந்தச் சாரியை பெறும்?

முதலாம் வேற்றுமையும் எட்டாம் வேற்றுமையுந் தவிர மற்ற வேற்றுமைகள் இன் சாரியையும் பெறும்.

(உ-ம்.) தந்தையின்,
கையினால்,
பசுவினது.

**66. NOUNS ENDING IN** அம்.

சுசு. மகர வீற்றுப் பெயர்ச் சொற்கள் எவ்வாறு வேற்றுமைப்படும்?

மகர வீற்றுப் பெயர்ச் சொற்கள் வேற்றுமைப்படும்பொழுது, அம் என்பது கெட அத்துச் சாரியை பெறும்.

(உ-ம்.) மரம், மரத்தை; நிலம், நிலத்துக்கு.

**67. THE NOUN.** எல்லாம்.

சுஎ. எல்லாம் என்பது எந்தச் சாரியை பெறும்?

எல்லாம் என்பது அற்றுச் சாரியையும், உம் என்னும் இடைச் சொல்லும் வரப்பெறும். சிலவிடத்து மகரங் கெடவும் பலர்பாலுக்குரிய விகுதி தோன்றவும் பெறும்.

(உ-ம்.) எல்லா வற்றையும்,
எல்லா மனிதர்களும்,
மனிதர் எல்லாரும்.

**68. NOUNS ENDING IN** டு, று.

சுஅ. தனிக்குறில் அணையாத டு, று, ஈற்றிலிருக்கிற பெயர்கள் எவ்வாறு வேற்றுமைப் படும்?

குற்றியலுகரங் கெட ட், ற் இரட்டிக்கும்.

(உ-ம்.) ஆடு, ஆட்டை.
ஆறு, ஆற்றை.

**69 TERMINATIONS OF THE PLURAL.**

௬௯. பன்மைப் பாலின் உருபுகள் எவை?

**பன்மைப் பாலின் உருபுகள் அர், ஆர், கள், மார், என்பவை ஆம்.**

னகர வீற்றுப் பெயர்களில் னகரம் ரகரமாகிக் கள் என்னும் விகுதியைப் பெற்றும், பெறாதும், வேற்றுமை உருபுகளைப் பெறும்.

(உ-ம்.) தந்தையர், தந்தையார்,
வீடுகள், குருமார்,
மனிதர், மனிதர்கள்.

**70. PARADIGM.**

௭0. மேற் சொல்லிய வேற்றுமைகளைக் காட்டிய அட்டவணைகளைச் சொல்லு:

(உ-ம்.)

| வேற்றுமை. | ஒருமை. | பன்மை. |
|---|---|---|
| க. | தந்தை, தந்தையானவர். | தந்தைகள். |
| உ. | தந்தையை. | தந்தைகளை. |
| ௩. | தந்தையால்-யான்-யொடு யோடு-யுடன். | தந்தைகளால், ஜீ |
| ௪. | தந்தைக்கு. | தந்தைகளுக்கு. |
| ௫. | தந்தையில்-யின்-யிலிருந்து-யினின்று. | தந்தைகளில், ஜீ |
| ௬. | தந்தையினது-யினுது-யின-தந்தையினுடைய. | தந்தைகளினது, ஜீ |
| ௭. | தந்தையினிடத்தில்-தந்தையில்-யின்கண். | தந்தைகளிடத்தில், ஜீ |
| அ. | தந்தையே. | தந்தைகளே. |

**71. DECLENSION OF** அது, இது, எது, யாது.

௭௧. அது, இது, எது, யாது என்பவை எவ்வாறு வேற்றுமைப்படும்?

ஒருமையிலே இன் சாரியையும் அன் சாரியையும் பெறும். பன்மையிலே அற்றுச்சாரியையும் பெறும்; து என்பது வையாகத் திரியும்.

(உ-ம்.)

| வேற்றுமை. | ஒருமை. | பன்மை. | |
|---|---|---|---|
| ௧. | அது. | அவை, | அவைகள். |
| ௨. | அதை, அதனை. | அவற்றை, | அவைகளை. |
| ௩. | அதினால். | அவற்றால், | அவைகளால். |

**72. DECLENSION OF 1ST PERSONAL PRONOUN.**

௭௨. தன்மை இடமாகிய நான் என்பது எவ்வாறு வேற்றுமைப்படும்?

ஒருமையிலே இரண்டாவது முதலான வேற்றுமைகளில் நான் என்பது என் எனத்திரியும்.

பன்மையிலே முதல் வேற்றுமையில் நான் என்பது நாம் எனத்திரியும். இரண்டா முதலிய வேற்றுமைகளிலும் எம் எனவும் நம் எனவுந் திரியும்.

(உ-ம்.)

| வேற்றுமை. | ஒருமை. | பன்மை. |
|---|---|---|
| ௧. | நான், யான். | நாம், யாம், நாங்கள், யாங்கள். |
| ௨. | என்னை. | நம்மை, எங்களை. |
| ௩. | என்னால். | நம்மால், எங்களால். |
| ௪. | என், எனது<br>என்னுடைய | நம், நமது, நம்முடைய.<br>எம், எங்கள், எங்களுடைய. |
| | | முதலியவும் அவ்வாறே. |

**73. DECLENSION OF 2D PERSONAL PRONOUN.**

எ௩. நீ என்பது எவ்வாறு வேற்றுமைப் படும்?

ஒருமையிலே இரண்டாவது முதலிய வேற்றுமைகளில் முன்னிலை இடமாகிய நீ என்பது உன் எனத்திரியும்.

பன்மையிலே முதல் வேற்றுமையில் நீர் எனவும், நீம் எனவுந் திரியும். இரண்டாமுதலிய வேற்றுமைகளிற் உம் எனத் திரியும்.

(உ-ம்.)

| வேற்றுமை. | ஒருமை. | பன்மை. |
|---|---|---|
| க. | நீ. | நீர், நீங்கள், நீவிர், நீயிர். |
| உ. | உன்னை, நின்னை. | உம்மை, உங்களை. |
| ௩. | உன்னால், நின்னால். | உம்மால், உங்களால். |
| ச. | உன், உனது, உன்னுடைய, நின். | உங்கள், உங்களுடைய. |
| | | முதலியவும் இவ்வாறே. |

☞ செய்யுளில் நும்மைமுதலியவும் வரும்.

**74. DECLENSION OF THE REFLEXIVE PRONOUN.**

எச. தான் என்பது எவ்வாறு வேற்றுமைப் படும்?

ஒருமையிலே இரண்டாவது முதலிய வேற்றுமைகளிற் படர்க்கை இடமாகிய தான் என்பது தன் எனத் திரியும்.

பன்மையிலே முதல் வேற்றுமையில் தாம் எனத் திரியும். இரண்டு முதலிய வேற்றுமைகளில் தம் எனத் திரியும்.

(உ-ம்.)

| வேற்றுமை. | ஒருமை. | பன்மை. |
|---|---|---|
| க. | தான். | தாம், தாங்கள். |
| உ. | தன்னை. | தம்மை, தங்களை. |
| ௩. | தன்னால். | தம்மால், தங்களால் முதலியவும் அவ்வாறே. |

# உ. வினையியல்.

## II. VERBS.

**75. ANALYSIS OF VERBAL FORMS.**

எரு. வினைச்சொல்லில் எத்தனை பொருளை அறிய வேண்டும்?

வினைச் சொல்லிற் பகுதி, விகுதி, மூவிடம், ஐம்பால், காலம், ஏவல், வியங்கோள், ஈறெச்சம், எதிர்மறை, தொழிற்பெயர், இப்பத்துப் பொருளையும் அறிய வேண்டும்.

**76. ROOT.**

எசா. இவற்றுள் பகுதி ஆவதென்ன?

பகுக்கப் படாமற் சொல்லின் முதனிலையாய் நிற்பதே பகுதியாம்.

(உ-ம்.) நட, படி, விடு, இரு, போ.

**77. TERMINATIONS.**

எஎ. விகுதி ஆவதென்ன?

திணை, பால், இடம் முதலியவற்றைக் காண்பித்துச், சொல்லின் ஈற்றிலே நிற்கும் உருபே விகுதி என்பதாம்.

| உ-ம். | | | விகுதி. | பகுதியும், விகுதியும். |
|---|---|---|---|---|
| உயர்திணை. | ஆண்பால். | தன்மை. | ஏன், என்.<br>கு, டு, து, று, அல், அன். | வந்தேன், வந்தனென். |
| | பெண்பால். | முன்னிலை. | ஆய், இ, ஐ, ஓய். | வந்தாய், வந்தி, வந்தை, வந்தோய். |
| | பலர்பால். | தன்மை. | ஓம், அம், ஏம். | வந்தோம், வந்தனம், வந்தேம். |
| | | முன்னிலை. | ஈர், ஈர்கள்.<br>இர்.<br>மின். | வந்தீர், வந்தீர்கள்.<br>வந்திர், வந்தினிர்.<br>நடமின். |
| | ஆண்பால். | படர்க்கை. | ஆன், அன். | வந்தான், வந்தனன். |
| | பெண்பால். | படர்க்கை. | ஆள், அள். | வந்தாள், வந்தனள். |
| | பலர்பால். | படர்க்கை. | ஆர், ஆர்கள்.<br>அர், ப.<br>மார். | வந்தார், வந்தார்கள்.<br>வந்தனர், நடப்ப.<br>நடமார். |
| அஃறிணை. | ஒன்றன்பால். | படர்க்கை. | து, அது. | வந்தது. |
| | பலவின்பால். | படர்க்கை. | அ, ஆ. | வந்த, வந்தன, நடவா. |

இவ்விகுதிகளோடு வழங்குகிற வினைச்சொல் வினைமுற்று எனவும் முற்றுவினை எனவும் படும். அன் என்னுஞ்சாரியையும் வந்தது காண்க.

78. **TENSES.**

எஅ. காலம் ஆவது எத்தனை வகை ஆம்?

போன காலம், நிகழ் காலம், வருங் காலம், என மூவகையாம். இவை பகுதி, விகுதி இரண்டிற்கும் நடுவே வரும் இடைநிலைகளாற் குறிக்கப்படும்.

79. **SIGNS OF THE PAST TENSE.**

எகூ. போன காலத்து இடைநிலைகள் எவை?

த், த்த், ந்த், ட், ற், க், இன் ஆகிய இவ்வேழும் போன காலத்து இடைநிலைகள் ஆம்.

(உ-ம்.)

| பகுதி. | இடைநிலை. | விகுதி. | வினைமுற்று. |
|---|---|---|---|
| செய் | த் | ஏன் | செய்தேன். |
| படி | த்த் | ஏன் | படித்தேன். |
| நட | ந்த் | ஓம் | நடந்தோம். |
| உண் | ட் | ஆய் | உண்டாய். |
| பெறு | ற் | அது | பெற்றது. |
| தொகு | க் | அது | தொக்கது. |
| அனுப்பு | இன் | ஈர் | அனுப்பினீர். |

☞ சிலவினைப்பகுதிகளோடு அளபெடையும் இன் சாரியையுங் கூடிவரவும் போனகாலத்துவினைமுற்றும்.

(உ-ம்.) தழுவு, — தழீ இனேன்.
விளை — விளை இனேன்.
உறு — உறீ இனேன்.

80. **SIGNS OF THE PRESENT TENSE.**

அo. நிகழ் காலத்தைக் குறிக்கும் இடை நிலைகள் எவை?

கிறு, க்கிறு, கின்று, க்கின்று, ஆநின்று, ஆகிய இவ்வைந்தும் நிகழ் காலத்தைக் குறிக்கும் இடை நிலைகள் ஆம்.

(உ-ம்.)

| பகுதி. | இடைநிலை. | விகுதி. | வினைமுற்று. |
|---|---|---|---|
| படி, | கிறு, | ஏன், | படிகிறேன். |
| படி, | க்கிறு, | ஏன், | படிக்கிறேன். |
| செய், | கின்று, | ஓம், | செய்கின்றோம். |
| அழி, | க்கின்று, | ஆன், | அழிக்கின்றான். |
| நட | ஆநின்று, | ஆய், | நடவாநின்றாய். |

**81. SIGNS OF THE FUTURE TENSE.**

அக. வருங் காலத்தைக் குறிக்கும் இடை நிலைகள் எவை?

வ், ப், ப்ப், இம்மூன்றும் வருங் காலத்தைக் குறிக்கும் இடைநிலைகள் ஆம்.

(உ-ம்.)

| பகுதி. | இடைநிலை. | விகுதி. | வினைமுற்று. |
|---|---|---|---|
| செய், | வ், | ஏன், | செய்வேன். |
| உண், | ப், | ஓம், | உண்போம். |
| நட, | ப்ப், | ஆய், | நடப்பாய். |

செய்யுளிற் கு என்னுஞ் சாரியையும் வரும்.

(உ-ம்.) செய்குவேன்.

**82. RULES FOR THE FORMATION OF THE 3 TENSES.**

அஉ. முக்காலங்களுக்கும் பொதுவான விதிகள் எவை?

(க) தன் வினைக்கும், பிற வினைக்கும்பொதுவாய் நிற்கும் பல வினைப் பகுதிகள், நிகழ் காலத்திலே கிறு என்னும் இடைநிலையைப் பெறும்பொழுது தன் வினையாகவும், க்கிறு என்னும் இடை நிலையைப் பெறும்பொழுது, பிறவினையாகவும் வழங்கும். அவற்றிற்கு முறையே போனகாலத்தில் ந்த் என்னும் இடை நிலையும் த்த் என்னும் இடை நிலையும் வருங்காலத்தில் வ் என்னும் இடை நிலையும், ப்ப் என்னும் இடை நிலையும் வரும்.

| | பகுதி. | | நிகழ் காலம். | போனகாலம். | வருங்காலம். |
|---|---|---|---|---|---|
| (உ-ம்.) | அழி. | தன்வினை.<br>பிறவினை. | அழிகிறேன்,<br>அழிக்கிறேன், | அழிந்தேன்.<br>அழித்தேன். | அழிவேன்.<br>அழிப்பேன். |

கெடு, மேய், விரி முதலியவும் அவ்வாறெனக் காண்க.

(உ) தன் வினையாகி ங்கு, கு, ம்பு, சு, டு. ஈற்றிலுள்ள பகுதிகளும், பிற வினையாகி க்கு, ப்பு, ச்சு, ட்டு, ஈற்றிலுள்ள பகுதிகளும், பெரும்பாலும் நிகழ்காலத்திலே கிறு என்னும் இடை நிலையையும், போனகாலத்திலே இன் என்னும் இடைநிலையையும், வருங் காலத்திலே வ் என்னும் இடை நிலையையும் பெறும்.

| | பகுதி. | நிகழ்காலம். | போனகாலம். | வருங்காலம். |
|---|---|---|---|---|
| (உ-ம்.) தன்வினை. | அடங்கு, | அடங்குகிறேன், | அடங்கினேன், | அடங்குவேன். |
| பிறவினை. | அடக்கு, | அடக்குகிறேன், | அடக்கினேன், | அடக்குவேன். |
| தன்வினை. | பேசு, | பேசுகிறேன், | பேசினேன், | பேசுவேன். |
| பிறவினை. | பாய்ச்சு, | பாய்ச்சுகிறேன், | பாய்ச்சினேன், | பாய்ச்சுவேன். |

(ரு) அகர வீற்றுப் பகுதிகள் நிகழ்காலத்திலே க்கிறு என்றும், போன காலத்திலே ந்த் என்றும், வருங் காலத்திலே ப்ப் என்றும், இடை நிலைகளைப் பெறும்.

(உ-ம்)

| பகுதி. | நிகழ்காலம். | போனகாலம். | வருங்காலம். |
|---|---|---|---|
| நட, | நடக்கிறேன், | நடந்தேன், | நடப்பேன். |
| பற, | பறக்கிறேன், | பறந்தேன், | பறப்பேன். |

(சு) ண், ளு ஈறுள்ள பகுதிகள் முக்காலத்திலும் முறையே கிறு, ட், வ், ஆவது, ப், ஆவது இடை நிலைகளாகப் பெறும்.

(உ-ம்.)

| பகுதி. | நிகழ். | போன. | வரும். |
|---|---|---|---|
| உண், | உண்கிறேன், | உண்டேன், | உண்பேன். |
| ஆளு, | ஆளுகிறேன், | ஆண்டேன், | ஆளுவேன். |

(௫) ன், லு ஈறுள்ள பகுதிகள் முக்காலத்திலும் முறையே, கிறு, ற், வ், ஆவது, ப் ஆவது இடை நிலைகளாகப் பெறும்.

(உ-ம்.)

| பகுதி. | நிகழ். | போன. | வரும். |
|---|---|---|---|
| தின், | தின்கிறேன், | தின்றேன், | தின்பேன். |
| செல்லு, | செல்லுகிறேன், | சென்றேன், | செல்லுவேன். |

(௬) தனிக்குறிலை யணைந்த டு, று, கு, ஈறுள்ள பகுதிகள் நிகழ் காலத்திலே கிறு என்னும் இடை நிலையையும், போன காலத்திலே ஒற்றின் மிகுதலையும், வருங் காலத்திலே வ் என்னும் இடை நிலையையும் பெறும்.

(உ-ம்.)

| பகுதி. | நிகழ். | போன. | வரும். |
|---|---|---|---|
| படு, | படுகிறேன், | பட்டேன், | படுவேன். |
| பெறு, | பெறுகிறேன், | பெற்றேன், | பெறுவேன். |
| தகு, | தகுகிறேன், | தக்கேன், | தகுவேன். |

(எ) சில பகுதிகள் அவ்வவற்றிற்குரிய சில விகாரங்களைப்பெறும்.

(உ-ம்.)

| | பகுதி. | நிகழ்காலம். | போனகாலம். | வருங்காலம். |
|---|---|---|---|---|
| (க) | வா | வரு - கிறேன், | வந்தேன், | வருவேன். |
| | தா | தரு - கிறேன், | தந்தேன், | தருவேன். |
| (உ) | கல் | கற் - கிறேன், | கற்றேன், | கற்பேன். |
| | எல் | ஏற் - கிறேன், | ஏற்றேன், | ஏற்பேன். |
| | கேள் | கேட் - கிறேன், | கேட்டேன், | கேட்பேன். |
| | நில் | நிற் - கிறேன், | நின்றேன், | நிற்பேன். |
| (ஈ) | இரு | இரு - க்கிறேன், | இருந்தேன், | இருப்பேன். |
| (ச) | விள்ளு | விள்ளு - கிறேன், | விண்டேன், | விள்ளுவேன். |
| | ஈனு | ஈனு - கிறேன், | ஈன்றேன், | ஈனுவேன். |
| | போடு | போடு - கிறேன், | போட்டேன், | போடுவேன். |
| | கொள்ளு | கொள்ளு - கிறேன், | கொண்டேன், | கொள்ளுவேன். |
| (ரு) | காண் | காண் - கிறேன், | கண்டேன், | காண்பேன். |

| | பகுதி. | நிகழ்காலம். | போனகாலம். | வருங்காலம். |
|---|---|---|---|---|
| (௬) | பெய், செய், நெய், வை, பொரு, அழு, உழு, தொழு | கிறேன், | தேன், | வேன். |
| (௭) | விழு | கிறேன், | விழுந்தேன், வீழ்ந்தேன், | விழுவேன். |
| | வாழு | வாழு - கிறேன், | வாழ்ந்தேன், | வாழுவேன். |
| (௮) | ஆகு | ஆகுகிறேன், ஆகிறேன், | ஆனேன், ஆகினேன், ஆயினேன், | ஆவேன். ஆகுவேன். |
| | போ | போகிறேன், போகுகிறேன், | போனேன், போகினேன், போயினேன், | போவேன். போகுவேன். |
| (௯) | சா | சாகிறேன், | செத்தேன், | சாவேன். சாகுவேன். |
| (௧௦) | வே | வேகிறேன், | வெந்தேன், | வேகுவேன். வேவேன். |
| | நோ | நோகிறேன், | நொந்தேன், | நோகுவேன். நோவேன். |

33. PARADIGM OF THE VERBS.

௩௩. இம்மூன்று காலங்களும் விகுதிகளோடே வழங்குகிற அட்டவணையைச் சொல்லு.

(உ-ம்.)

| | | நிகழ்காலம். | போனகாலம். | வருங்காலம். |
|---|---|---|---|---|
| ஒருமை. | தன்மை. | படிக்கிறேன்,<br>செய்கிறேன்,<br>படிக்கின்றனென்,<br>நடவாநின்றேன், | படித்தேன்,<br>செய்தேன்,<br>நடந்தனென்,<br><br>உண்டு,<br>வந்து. | படிப்பேன்.<br>செய்வேன்.<br>நடப்பேன்,<br>நடப்பால், உண்கு,<br>காண்பன்,<br>வாழ்து, சென்று. |
| | முன்னிலை. | படிக்கிறாய்,<br>செய்கின்றாய்,<br>நடவாநின்றாய், | படித்தாய்,<br>நடந்தனை,<br>நடந்தி, | படிப்பாய். |
| | படர்க்கை. | படிக்கிறான்,<br>படிக்கின்றான், | படித்தான்,<br>படித்தனன், | படிப்பான். |
| | | படிக்கிறாள்,<br>படிக்கின்றனள், | படித்தாள்,<br>படித்தனள், | படிப்பாள், |
| | | படிக்கிறது,<br>செய்கிறது, | படித்தது,<br>சொல்லினது,<br>சொல்லிற்று, | படிக்கும்.<br>செய்யும். |

(உ-ம்.)

| | | நிகழ்காலம். | போனகாலம். | வருங்காலம். |
|---|---|---|---|---|
| பன்மை. | தன்மை. | படிக்கிறேம், | படித்தோம்,<br>நடந்தாம்,<br>நடந்தனம்,<br>நடந்தேம்,<br>நடந்தினெம், உண்டும்,<br>வந்தும். | படிப்போம்.<br>வாழ்தும்,<br>செய்கும்,<br>சேரும். |
| | முன்னிலை. | படிக்கிறீர்கள்.<br>படிக்கிறீர், | நடந்தீர்கள்.<br>நடந்தீர்,<br>நடந்திர். | படிப்பீர்கள்.<br>படிப்பீர். |
| | படர்க்கை. | படிக்கிறார்கள்,<br>படிக்கிறார்,<br>படிக்கின்றனர், | படித்தார்கள்,<br>படித்தார்,<br>நடந்தனர், | படிப்பார்கள்.<br>படிப்பார்.<br>நடப்பர்,<br>என்ப, என்மர்.<br>என்மனார், |
| | | படிக்கின்றன, | படித்தன,<br>நடந்தன,<br>நடந்த, | படிக்கும். செய்யும்.<br>நடப்பன. |

84. IMPERATIVE.

அச. ஏவல் ஆவது என்ன ?

ஏவல் ஆவது கட்டளைப் பொருளுள்ள வினையாகிய முன்னிலை யிடத்தையே பெறும். வினைப்பகுதியே வழக்கமாய் ஒருமை ஏவல் ஆம். உம், உங்கள், புணர்ந்தால் பன்மை ஏவலாம். செய்யுளிலே பல விகுதிகளையும் பெறும்.

(உ-ம்.) படி, படியும், படியுங்கள்.

உண்மோ, கேட்டி, ஒருமையிலும்; உண்மின், உண்மினே, உண்மினீர், பன்மையிலும் வரும்.

85. THE OPTATIVE.

அரு. வியங்கோள் ஆவதென்ன?

வியங்கோள் ஆனது இருதிணை ஐம்பால் மூவிடங்களுக்கும் உரித்தாய் மரியாதை ஏவற் பொருளும் விருப்பப் பொருளுமுள்ள வினையாம். இதற்கு விகுதிகள் க, இய, இயர், அல், தல், ஆக, என்பவையாம்.

(உ-ம்.)

| | | | | |
|---|---|---|---|---|
| ஒருமை. | நான், | வாழ்க, | வாழ்வேனாக, | செய்யக்கடவேன். |
| | நீ, | வாழிய, | வாழ்வாயாக, | செய்யக்கடவாய். |
| | அவன், | வாழியர், | வாழ்வானாக, | செய்யக்கடவான். |
| | அவள், | கொள்ளல், | வாழ்வாளாக, | செய்யக்கடவாள். |
| | அது. | வாழ்க, | வாழ்வதாக, | செய்யக்கடவது. |
| பன்மை. | நாம், | வாழ்க, | வாழ்வோமாக, | செய்யக்கடவோம. |
| | நீர், | வாழிய, | வாழ்வீராக, | செய்யக்கடவீர். |
| | நீங்கள், | வாழியர், | வாழ்வீர்களாக, | செய்யக்கடவீர்கள். |
| | அவர்கள், | கொள்ளல், | வாழ்வார்களாக, | செய்யக்கடவார்கள். |
| | அவை, | வாழ்க, | வாழ்வனவாக, | செய்யக்கடவன. |

86. DEPENDANT VERBAL FORMS, OR ADVERBIAL PARTICIPLES.

அகூ. வினையெச்சம் என்பன எவை?

முக்காலத்து வினை முற்றுகளைக்கொண்டு முடிவது வினையெச்சமாம். வினை எச்சங்கள் மூன்றும். அவற்றுள்,

(க) வினைப்பகுதியோடு போனகாலத்து இடைநிலையையும் உகர விகுதியும் வரவும், இன் என்னும் இடைநிலையின் ஈற்றிலுள்ள ன கெடவும் போனகாலத்து வினையெச்சம் ஆம்.

(உ-ம்.)

| பகுதி. | இடைநிலை. | விகுதி. | வினையெச்சம். |
|---|---|---|---|
| படி | த்த் | உ | படித்து. |
| அனுப்பு | இன் | னகரங் கெட | அனுப்பி. |

☞ [க] செய்யுளிலே செய்ப்பு, செய்யா, என்பவற்றைப் போல்வனவும் வரும்.

[உ] ஆகி என்பது ஆய் எனவும், போகி என்பது போய் எனவும் வரும்.

(உ) பகுதியோடு போனகாலத்து இடை நிலையும், ஆல் என்னும் விகுதியும் வரவும்; பகுதியானது க்க் என்னும் இடைநிலை வந்தும் வராதும் இல், இன் என்னும் விகுதிகளைப்பெறவும், வருங்காலத்து வினையெச்சம் ஆம்.

| | பகுதி. | இடைநிலை. | விகுதி. | வருங்காலத்து வினையெச்சம். |
|---|---|---|---|---|
| (உ-ம்.) | செய் | த் | ஆல், இல், இன். | செய்தால், செய்யில், செய்யின். |
| | படி | த்த் | ஆல், இல், இன். | படித்தால், படிக்கில், படிக்கின். |
| | அனுப்பு | இன் | ஆல், இன். | அனுப்பினால், அனுப்பில், அனுப்பின. |

(௩) க்கிறு என்னும் நிகழ்காலத்து இடைநிலையைப் பெற்ற வினைப் பகுதியோடு க்க என்னும் விகுதியையும்; கிறு என்னும் நிகழ்காலத்து இடைநிலையைப் பெற்ற வினைப்பகுதியோடு அ, என்னும் விகுதியையுஞ் சேர்த்தால் முக்காலத்துக்கும் பொதுவான வினையெச்சம் ஆம்.

| | பகுதி. | விகுதி. | முக்காலத்துக்கும் பொதுவான வினையெச்சம். |
|---|---|---|---|
| (உ-ம்.) | படி | க்க | படிக்க. |
| | செய் | அ | செய்ய. |
| | அனுப்பு | அ | அனுப்ப. |

☞ செய்யுளில், செய்க, செய்தப, நடப்ப எனவும், இவைபோல்வனவும் வரும்.

## 87. RELATIVE VERBAL FORMS, OR ADJECTIVE PARTICIPLES.

அஎ. பெயரெச்சம் என்பன எவை?

பெயர்ச்சொல்லைக் கொண்டு முடியும் எச்சம் பெயரெச்சம் ஆம். பெயரெச்சங்கள் மூவகையாம். இவற்றுள்,

(க) வினைப்பகுதியானது போனகாலத்து இடைநிலையோடு அகர விகுதியையும் பெற்றால் போனகாலத்துப் பெயரெச்சம் ஆம்.

(உ-ம்.)

| பகுதி. | இடைநிலை. | விகுதி. | போனகாலத்துப் பெயரெச்சம். |
|---|---|---|---|
| படி | த்த் | அ | படித்த. |
| செய் | த் | அ | செய்த. |
| அனுப்பு | இன் | அ | அனிப்பின. |

☞ [க] நடத்திய, தழீஇய என்பவைபோல்வனவும் வரும்.

[உ] ஆகின என்பது ஆயின, ஆன, ஆகிய, ஆய எனவும்வரும். போகின, போயின, போன என்றும் வரும்.

(உ) வினைப்பகுதியானது நிகழ்காலத்து இடைநிலையோடு அகரவிகுதியையும் பெற்றால் நிகழ்காலத்துப் பெயரெச்சம் ஆம்.

(உ-ம்.)

| பகுதி. | இடைநிலை. | விகுதி. | நிகழ்காலத்துப் பெயரெச்சம். |
|---|---|---|---|
| படி | க்கிறு | அ | படிக்கிற. |
| செய் | கிறு | அ | செய்கிற. |

(௩) வருங்காலத்து அஃறிணைப் படர்க்கை வினைமுற்று வருங்காலத்துப் பெயரெச்சம் ஆகவும் வழங்கும்.

(உ-ம்.) படிக்கும்.
செய்யும்.

☞ ஆதும் என்பது ஆம் எனவும், போதும் என்பது போம் எனவும், உலாவும் என்பது உலாம் எனவும் வரும்.

**88. NEGATIVE VERBS.**

*௮௮. எதிர்மறை ஆவதென்ன ?*

வினையின் தொழிலை மறுக்கிற வினைச்சொல் எதிர்மறை என்னப்படும். இது ஆ, இல், அல் முதலிய விகுதிகளைக் கொண்டு முடியும்.

**89. FINITE NEGATIVE VERB.**

*௮௯. எதிர்மறை வினைமுற்று எவ்வாறு வரும்?*

வினைப்பகுதியும், விகுதியும், இடைநிலையின்றிப் புணர்வது எதிர்மறை வினைமுற்றும். இது முக்காலத்துக்கும் பொதுவாம்.

(உ-ம்.)

| பகுதி. | | விகுதி. | | முக்காலத்துக்கும் பொதுவான எதிர்மறை. |
|---|---|---|---|---|
| படி. | ஒருமை. | ஏன், | ஒருமை. | படியேன். |
| | | ஆய், | | படியாய். |
| | | ஆன், | | படியான். |
| | | ஆள், | | படியாள். |
| | | ஆது, | | படியாது. |
| | | ஆ, | | படியா. |
| படி. | பன்மை. | ஓம், ஏம் | பன்மை. | படியோம், படியேம். |
| | | ஈர், | | படியீர். |
| | | ஈர்கள், | | படியீர்கள். |
| | | ஆர், | | படியார். |
| | | ஆர்கள், | | படியார்கள். |
| | | ஆ | | படியா. |

### 90. NEGATIVE DEPENDANT VERBAL FORMS.

௯0. எதிர்மறை வினையெச்சம் எவ்வாறும்?

வினைப்பகுதியோடு ஆமல், ஆது என்னும் விகுதிகளைச் சேர்த்தால் எதிர்மறை வினையெச்சம் ஆம்.

(உ-ம்.)

| பகுதி. | விகுதி. | எதிர்மறை வினையெச்சம். |
|---|---|---|
| படி<br>அனுப்பு | ஆமல்<br>ஆது | படியாமல், படியாது.<br>அனுப்பாமல், அனுப்பாது. |

இவற்றோடு இரு என்னுந் துணை வினையைச் சேர்ப்பதும் உண்டு.

(உ-ம்.) படியாமலிருக்கிறேன், அனுப்பாதிருந்தான், செய்யாமலிருப்பார்கள்.

### 91. NEGATIVE RELATIVE AND VERBAL FORMS.

௯௧. எதிர்மறைப் பெயரெச்சம் எவ்வாறு வரும்?

வினைப்பகுதியோடு ஆத, ஆ என்னும் விகுதிகள் சேர்ந்தால் எதிர்மறைப் பெயரெச்சம் ஆம்.

(உ-ம்.)

| பகுதி. | விகுதி. | எதிர்மறைப் பெயரெச்சம். |
|---|---|---|
| படி | ஆத, ஆ | படியாத, படியா. |

### 92. NEGATIVE IMPERATIVE.

கூ௨. எதிர்மறை ஏவல் எவ்வாறு வரும்?

வினைப்பகுதியோடே ஏல், அல் என்னும் விகுதிகள் சேர்ந்தால் எதிர்மறை ஒருமையேவல் ஆம். அன்மின் என்னும் விகுதி சேர்ந்தால் அதின் பன்மை ஆம்.

(உ-ம்.)

| பகுதி. | விகுதி. | எதிர்மறை ஏவல். | |
|---|---|---|---|
| படி | ஏல், அல், | ஒருமை. | படியேல், படியல். |
| | அன்மின் | பன்மை. | படியன்மின். |

☞ [க] செய்யுளிலே செய்யற்க, கொள்ளற்க, எனவும் வரும்.

[உ.] வழக்கத்திலே படியாதே, படியாதேயும், படியாதேயுங்கள்.
படியாதிரு, படியாதிரும், படியாதிருங்கள்
எனவும் வரும்,

### 93. CONJUGATED NOUNS.

கூ௩. குறிப்புவினை ஆவதென்ன?

பெயராகி, வினையாகவும் வழங்கிய சொற்கள் ஆம்.

(உ-ம்.) முதற்று, முதல என்பவை முதல் என்னும் பெயரால் உண்டான வினைக் குறிப்புகளாம்.

இவை வேற்றுமை உருபுகளையும், மூவிடத்துக்கும் ஐம்பாலுக்கும் உரிய விகுதிகளையும் பெறும்.

(உ-ம்.)

| | | ஆண்பால், | பெண்பால். | ஒன்றன்பால். | பலர்பால் | பலவின்பால். |
|---|---|---|---|---|---|---|
| (க) தன்மை. | க. | நல்லேன், | | | நல்லேம், | |
| | உ. | நல்லேனை, | | | நல்லேமை, | |
| | ரு. | நல்லேனால், | | | நல்லேமால், | |
| (உ) முன்னிலை. | க. | நல்லாய், நல்லோய், | | | நல்லீர், | |
| | உ. | நல்லாயை, | | | நல்லீரை, | |
| | ரு. | நல்லாயால். | | | நல்லீரால், | |
| (ரு) படர்க்கை. | க. | நல்லன், | நல்லள், | நல்லது, நன்று. | நல்லவர், நல்லார். | நல்லவை, நல்ல, நல்லன. |
| | | நல்லான், நல்லோன். | நல்லாள்; | | நல்லவர்கள், நல்லோர், | |
| | உ. | நல்லனை, | நல்லளை, | நல்லதை, | நல்லாரை, | நல்லவற்றை. |
| | ரு. | நல்லனால். | நல்லளால், | நல்லதால், | நல்லாரால், | நல்லவற்றால். |

இவைபோல மற்றையவும் வரும்.

94. VERBAL NOUNS.

கூச. தொழிற்பெயர் என்பன எவை?

கிறு என்னும் இடைநிலையைப்பெறும் பகுதிகளோடு அல், தல், கை, வு, என்னும் விகுதிகளையும்; க்கிறு என்னும் இடைநிலையைப்பெறும் பகுதிகளோடு த்தல், க்குதல், க்கை, ப்பு முதலிய விகுதிகளையுங் கூட்டினால் தொழிற்பெயர்களாம்.

(உ-ம்.)

| பகுதி. | விகுதி. | தொழிற் பெயர். |
|---|---|---|
| படி. | த்தல், ப்பு, க்குதல், க்கை. | படித்தல், படிப்பு. படிக்குதல், படிக்கை. |
| அறி. | தல், அல் வு | அறிதல், அறியல். அறிவு. |
| செய். | அல் கை | செய்யல். செய்கை. |

மை என்னும் விகுதி வினைப்பகுதியோடும் போனகால நிகழ்காலப் பெயரெச்சங்களோடும் எதிர்மறை ஆகார விகுதியோடும் மற்றைய பல பகுதிகளோடும் புணரத்தொழிற் பெயர்களாம்.

(உ-ம்.) தாழ் — தாழ்மை,
படிக்கின்ற — படிக்கின்றமை,
படித்த — படித்தமை,
படியா — படியாமை.

95. PARTICIPIAL NOUNS.

௯௫. பெயரெச்சத்தால் உண்டாகும் வினைப் பெயர்கள் எவை?

போனகால நிகழ்காலப் பெயரெச்சங்களோடும் ஐம்பாலுக்குரிய விகுதிகளைக்கூட்டினால், அந்தந்தக் காலத்துக்கும் பாலுக்கும் உரித்தான பெயர்ச்சொற்கள் உண்டாகும். பகுதியோடு ப்ப, ப, வ, என்னும் இடைநிலைகளையும், ஐம்பாலுக்குரிய விகுதிகளையுங் கூட்டினால் வருங்காலத்து வினைப்பெயர்கள் உண்டாம்.

(உ-ம்.)

| பெயர் எச்சம். | வினைப்பெயர்கள். |
| --- | --- |
| படிக்கிற | படிக்கிற வன், வள் வர்கள், து, வை. |
| படித்த, | படித்த வன், வள், வர்கள், து, வை. |
| படிப்ப, | படிப்ப வன், வள், வர்கள், து, ப்பவை. |
| செய்ப<br>செய்வ | செய்ப வன், வள், வர்கள், வது, பவை. |

96. OTHER VERBAL NOUNS.

௯௬. வினைப்பகுதிகளினாலே வருகிற வேறே பெயர்கள் உண்டோ?

வினைப்பகுதிகள் விகுதியின்றியும் வி, ஐ, கை முதலிய விகுதிகளைப் பெற்றும் பெயர்களாக வழங்குவதும் உண்டு.

(உ-ம்.)

| பகுதி. | விகுதி. | பெயர்ச்சொல். |
|---|---|---|
| பற, | ஐ | பறவை. |
| வகு, | ஐ, ப்பு. | வகை, வகுப்பு. |
| கல், | வி. | கல்வி. |
| ஒழுக்கு, | அம் | ஒழுக்கம். |
| உடு, | ஐ,க்கை, ப்பு, | உடை, உடுக்கை,உடுப்பு. |
| அறை, | .............. | அறை. |
| கெடு, | விகாரம். | கேடு. |
| பெறு, | .............. | பேறு. |
| பொரு, | .............. | போர். |
| விடு, | தி | விடுதி, வீடு. |
| ஓடு, | அம், ஐ. | ஓட்டம், ஓடை. |
| ஊர், | இ | ஊரி. |
| ஓர் | ச்சி | ஓர்ச்சி. |
| தின் | .............. | தீனி. |

97. KINDS OF VERBS.

௯எ. மேற் காட்டிய வினைச்சொல் எத்தனை வகை ஆம்?

தெரிநிலைவினை என்றும், குறிப்புநிலை வினை என்றும் இருவகை ஆம்.

98 VERBS INDICATING DIFFERENCE OF TIME.

௯அ. தெரிநிலைவினை ஆவதென்ன?

குறிப்புவினை அன்றிக் காலந்தெரிகின்ற வினைகளியாவுந் தெரிநிலை வினைகள் ஆம்.

(உ-ம்.) நட, வா, நடப்பி, வருவி.

☞ இவை வேற்றுமை கொள்ளாமல் இடைநிலை முதலியவைகளாற் காலந் தெரியநிற்பன தெரிநிலை வினைகள் ஆம்.

99. CLASSES OF VERBS.

௯௯. அத்தெரிநிலை வினைகள் எவ்வாறு வகுக்கப்படும்?

செயப்படுபொருள்குன்றியவினைகளும், செயப்படுபொருள் குன்றாதவினைகளும்; தன்வினை பிறவினைகளும்; செய்வினை, செயப்பாட்டு வினைகளும்; விதிவினை, மறைவினைகளுமாக வகுக்கப்படும்.

100. INTRANSITIVE VERBS.

௧௦௦. செயப்படுபொருள்குன்றிய வினைகள் எவை?

செயப்படு பொருளை உணர்த்திய இரண்டாம் வேற்றுமையை வேண்டாத வினை செயப்படுபொருள்குன்றியவினை ஆம்.

(உ-ம்.) நடந்தான்; இதை நடந்தான் என வராது.

101. TRANSITIVE VERBS.

௧௦௧. செயப்படுபொருள்குன்றாத வினைகள் எவை?

செயப்படு பொருளை உணர்த்திய இரண்டாம் வேற்றுமையை வேண்டிவரும் வினை செயப்படுபொருள்குன்றாத வினை ஆம்.

(உ-ம்.) கொன்றான்; மிருகத்தைக் கொன்றான், என வரும்.

102. VERBS DENOTING DIRECT ACTION, TRANSITIVE OR INTRANSITIVE.

௧௦௨. தன்வினை ஆவதென்ன?

தன் கருத்தாவாகிய எழுவாயின் செய்கையைக் காட்டுவது தன்வினையாம்.

(உ-ம்.) நடந்தான். அளித்தான்.

103. VERBS CAUSAL.

க0௩. பிறவினை ஆவதென்ன ?

தன் எழுவாயல்லாத பிற கர்த்தாவின் செய்கையைக் காட்டுவது பிறவினை ஆம். அது வி, ப்பி, த்து, ச்சு என்னும் விகுதிகளில் ஒன்றேனும் இரண்டேனும் பெற்றுவரும். சில வேளை மெல்லெழுத்து வல்லெழுத்தாகத் திரியவும், வல்லெழுத்து இரட்டிக்கவும் வரும்.

(உ-ம்.)

நடப்பிக்கின்றான், செய்விக்கிறான், நடத்துகிறேன், பாய்ச்சுகிறேன், என ப்பி, வி, த்து, ச்சு என்னும் விகுதிகள் வந்தது காண்க.

எழுப்புகிறேன், அடக்குகிறேன், என எழும்பு, அடங்கு என்னும் வினைப் பகுதிகளில் மகரம் பகரமாகவும், ஙகரம் ககரமாகவும் விகாரப்பட்டது காண்க.

உருக்குகிறது. அழிக்கிறது. என உருகு, அழி, என்னும் வினைகளில் ககரம் இரட்டித்தது.

போக்குகிறது, என போ என்னும் வினையில் ககரம் இரட்டித்தது.

104. ACTIVE VERBS.

க0௪. செய்வினை யாவதென்ன?

எழுவாய்க்கருத்தாவைக் கொண்டுவந்து செய்கையைக் காட்டுவது செய்வினை ஆம்.

(உ-ம்.) கொற்றன் கட்டினன்.

105. PASSIVE VERBS.

கO௫. செயப்பாட்டுவினை ஆவதென்ன?

செயப்படுபொருள்குன்றுதவினைகளின் முக்காலத்துக்கும் பொதுவான வினையெச்சத்தோடு படு என்னும் வினைப்பகுதியைச் சேர்த்தால், அது செயப்பாட்டுவினையாகி, மூன்றும் வேற்றுமைக் கர்த்தாவைக் கொண்டு வரும்.

(உ-ம்.) நடப்பிக்கப்படுகிறன், இவ்வீடு கொற்றனால் கட்டப்பட்டது, உண்ணப்படுகிறது.

உண் என்னும் பகுதி சில பகுதிகளோடே சேர்ந்து செயப்பாட்டு வினையாம்.

(உ-ம்.) அடியுண்டான்.
தள்ளுண்பான்.

106. AFFIRMATIVE AND NEGATIVE VERBS.

கO௬. விதிவினை, மறைவினை, என்பவை எவை?

வினையின் செய்கையை உண்டென்று நிச்சயிக்கிற வினை விதிவினை எனவும், உடன்பாட்டு வினை எனவும் படும். அச்செய்கையை மறுக்கிற வினை மறைவினை எனப்படும்.

(உ-ம்.) நடந்தேன், எ-து விதிவினை.
நடவேன், எ-து மறைவினை.

# ௩. இடைச் சொல்லியல்.

## 3. PARTICLES.

107. CLASSES OF PARTICLES.

கoஎ. இடைச்சொற்கள் எத்தனை வகை ஆம்?

(க) வேற்றுமை உருபுகளும், (உ) விகுதி உருபுகளும், (௩) இடைநிலை உருபுகளும், (ச) சாரியைகளும், (ரு) உவமைச் சொற்களும், (சு) தத்தம் பொருளை உணர்த்திய சொற்களும், (எ) இசை நிறைக்கிற சொற்களும், (அ) அசை நிறைக்கிற சொற்களும்; ஆக இடைச்சொற்கள் எட்டுவகை ஆம்.

108. INCREMENTS.

கoஅ. சாரியைகள் எத்தனை?

அன், ஆன், இன், அல், அற்று, இற்று, அத்து, அம், தம், நம், நும், ஏ, அ, உ, ஐ, கு, ன், இப்பதினேழுஞ் சாரியைகளாம்.

(உ-ம்.) மூன்று + கால் = மூன்றே கால், என்பதில் ஏ சாரியை.

மனிதன் + கு = மனிதனுக்கு, என்பதில் உ சாரியை.

மற்றவையும் இவ்வாறே.

109. WORDS OF COMPARISON.

கoகூ. உவமைச்சொற்கள் எவை?

போல, ஒப்ப, மான, நேர, நிகர், படி, புரை, உறழ முதலியவும் உவமைச் சொற்கள் ஆம்.

(உ-ம்.) இதைப்போல, அதற்கொப்ப.

110. PARTICLES OF VARIOUS MEANINGS.

ககO. தத்தம் பொருளை உணர்த்திய இடைச்சொற்கள் எவை?

ஏ, ஓ, ஆ, உம், என, என்று, என்பவன், என்பது, ஆனவன், ஆனது, ஆவது, முன், பின், கீழ், மேல், என்றூ, எனூ, அந்தோ முதலியவுந் தத்தம் பொருளைக் காட்டிய இடைச்சொற்கள் ஆம்.

111. USES OF ஏ.

கூகக. ஏகாரம் எத்தனை பொருளைத் தரும்?

ஏ அறு வகைப் பொருளைத் தரும். அவையாவன:

(க) தேற்றம். (உ-ம்) சன்மார்க்கருக்கே புகழ்.
(உ) எண். (உ-ம்) நிலமே, சலமே, தீயே, வளியே.
(௩) வினா. (உ-ம்) நீயே தந்தாய்?
(௪) பிரித்தல். (உ-ம்) அவனே தந்தான்.
(௫) ஈற்றசை. (உ-ம்) பகர்ந்தனனே.
(௬) இசைநிறை. (உ-ம்) ஏயே இவள் ஒருத்தி.

112. USES OF ஓ.

ககஉ. ஓகாரம் எத்தனை பொருளைக் காட்டும்?

ஓ எட்டுப் பொருளைக் காட்டும். அவையாவன:

(கூ) பிரித்தல். (உ-ம்) அவனோ செய்தான்.
(உ) ஒழியிசை. (உ-ம்) வேலைசெய்யவோ போகிறாய்?
(ங) எதிர்மறை. (உ-ம்) நானோ சொன்னேன்?
(ச) வினா. (உ-ம்) அவனோ?
(ரு) தெளிவு. (உ-ம்) நன்றோஅன்று,தீதோ,அன்று.
(சு) கழிவு. (உ-ம்) நைதல் இன்றி நல்லறஞ்செய்தாலோ உயிர் உய்யும்.
(எ) சிறப்பு. (உ-ம்) ஓ ஓ பெரியன்!
(அ) அசைநிலை. (உ-ம்) ஓ ஓ உவமன்!

**113. USES OF உம்.**

கககூ. உம் என்பது எத்தனைபொருளைக் காட்டும்?

உம் என்பது எட்டுப் பொருளைக் காட்டும். அவையாவன:

(க) எதிர்மறை. (உ-ம்) வருதலுந் தீது.
(உ) எச்சம். (உ-ம்) சாத்தனும் வந்தான்.
(ங) முற்று. (உ-ம்) தமிழ்நாட்டு மூவேந்தரும் வந்தார்கள்.
(ச) எண். (உ-ம்) பொன்னும் வெள்ளியும் ஈயமும்.
(ரு) சிறப்பு. (உ-ம்) குறவருமருளுங் குன்றம்.
(சு) ஐயம். (உ-ம்) பத்தாயினும், எட்டாயினும்.
(எ) ஆக்கம். (உ-ம்) பாலே மருந்தும் ஆயிற்று.
(அ) தெளிவு. (உ-ம்) ஆணும் அன்று, பெண்ணும் அன்று.

**114. SIGNS OF QUOTATION என, என்று.**

ககச. என என்று இவ்விரண்டும் எத்தனை பொருளைத் தரும்?

என, என்று ஏழு பொருளைத் தரும். அவையாவன:

(க) உவமை. (உ-ம்) கொடும்புலி பாய்ந்தெனப் பாய்ந்தான்.
(உ) எண். (உ-ம்) ஒன்றென, இரண்டென, இவ்விரண்டும் இவ்வாறு வழங்கும்.

(௫) குணம். (உ-ம்) வெள்ளென விளங்கிற்று.
(௬) வினை. (உ-ம்) கொள்ளெனக் கொண்டான்.
(௭) பெயர். (உ-ம்) உறையூர் என்று சொல்லப்படு
(௮) இசை. (உ-ம்) ஒல்லென ஒலித்தது. [வது.
(௯) குறிப்பு. (உ-ம்) பொள்ளென வந்தான்.

**115. EUPHONIC PARTICLES.**

௧௧௫. இசைநிறை ஆவதென்ன?

அர்த்தம் இன்றி ஓசை நிறைப்பதற்கு மாத்திரம் வரும் இடைச்சொல் இசைநிறை என்பதாம்.

(உ-ம்.) சொல்லேன் றெய்ய, என்பதில் தெய்யஎன்பது வெறும் இசை நிறையாம்.

**116. REDUNDANT PARTICLES.**

௧௧௬. அசைநிலை ஆவதென்ன?

அர்த்தம் இன்றி அசை நிறைப்பதற்கு மாத்திரம் வரும் இடைச்சொல் அசைநிலை ஆம்.

(உம்.) கற்றதனால் ஆய பயன் என்கொல், என்பதில் கொல் என்பது வெறும் அசைநிலைஆம்.

**117. VARIOUS INTERJECTIONS.**

௧௧௭. இரக்கவிடைச்சொற்களும், அச்சவிடைச்சொற்களும், இகழ்ச்சியிடைச் சொற்களும், அதிசயவிடைச்சொற்களும் எவை ?

ஆ அ, ஓ ஓ, அந்தோ, ஐயோ, அன்னோ, அச்சோ, முதலியவை இரக்கத்தையும்; கூ கூகூ, ஐயோ, ஐயையோ, முதலியவை அச்சத்தையும்; எஎ, சீ முதலியவை இகழ்ச்சியையும்; ஓகோ, ஓஓ, ஆகா, அம்மா, முதலியவை அதிசயத்தையுங் காட்டுகிற இடைச் சொற்களாம்.

# ச. உரிச்சொல்லியல்.

## 4. QUALIFYING WORDS: ADJECTIVES AND ADVERBS.

### 118. KINDS OF QUALIFYING WORDS.

கக அ. உரிச்சொல் எத்தனை வகை ஆம்?

பெயர்உரிச்சொல் என்றும், வினைஉரிச் சொல் என்றும் இருவகை ஆம்.

### 119. ADJECTIVES.

ககசு. பெயர்உரிச்சொல் எவ்வாறும்?

(க) சிலவிடத்துப், பெயர் ஆனது உரிச்சொல் ஆகவரும்.

(உ-ம்.) பொற்சிலை, என்பதில் பொன் என்னும் பெயர்ச் சொல்லானது குணத்தைக் காட்டிய உரிச்சொல்லாக வந்தது.

(உ) சிலவிடத்து, உள்ள, ஆன, என்னும் பெயரெச்சங்கள் புணர்வதினால் பெயர்ச்சொல் உரிச்சொல்லாக நிற்கும்.

(உ-ம்.) அறிவுள்ள மனிதன், செம்மையான பாதை.

(ரு) சிலபெயர்கள் ஈறு கெட்டுந் திரிந்தும் உரிச்சொல்லாகும்.

(உ-ம்.) மரம்,—மரக்கொம்பு. ஆடு,—ஆட்டுக்கால். எருது,—எருத்துமாடு. இவை ஆறும் வேற்றுமையின் தொகை என்று சொல்வதுந் தகும்.

(ச) சில சொற்கள் இயல்பாய் உரிச் சொல்லாம்.

(உ-ம்.) பல, நல, சில, புது.

**120. ADVERBS.**

கஉ0. வினையுரிச்சொல் எவ்வாறும்?

(க) சில வினையெச்சங்கள் வினையுரிச் சொல்லாக வழங்கும்.

(உ-ம்.) சாலப் பேசினான், நனி வருந்தினான்.

(உ) சில பெயர்ச்சொல்லோடே ஆய் என்னும் வினையெச்சம் புணர்வதினால் வினையுரிச் சொல்லாகும்.

(உ-ம்.) சந்தோஷமாய்ப் பேசினான்.

ஆக, ஆ என்பவைகளையும் பெற்றுவரும்.

(உ-ம்) சந்தோஷமாகப் பேசினான்.
நன்மையாச் சொன்னான்,
[சந்தோஷமுள்ளவனாய்ப் பேசினான்,
சந்தோஷமுடையவனாய்ப் பேசினான், எனவும்
வரும்.]

(ங) சில வினையின் பகுதியானது வினை உரிச்சொல்லாக வழங்கும்.

(உ-ம்.) கழி மிகவும்.

**121. SOME PECULIAR FORMATIONS.**

கஉக. சிறு, பெரு, குறு, கரு முதலிய உரிச் சொற்கள் எவ்வாறு வழங்கும்?

(க) சிலவிடத்து, விகாரமின்றி வழங்கும்.

(உ-ம்.) சிறுகலம்.

(உ) சில விடத்து, ஒற்று இரட்டிக்கும்.

(உ-ம்.) சிறு + இன்பம் = சிற்றின்பம்.
குறு + இயல் = குற்றியல்.
பசு + அரிசி = பச்சரிசி.

(ங) சில விடத்து, குறில் நெடிலாகும்.

(உ-ம்.) பெரு + இன்பம் = பேரின்பம்.
கரு + மேகம் = கார்மேகம்.

(ச) சில விடத்து, மகரந் தோன்றும்.

(உ-ம்.) அரு + பொருள் = அரும்பொருள்.
கொடு + கூற்றம் = கொடுங்கூற்றம்.

(ரு) சில விடத்து, ஈற்றுகரங்கெட இய என்னும் விகுதி தோன்றும்.

(உ-ம்.) சிறு + தகப்பன் = சிறியதகப்பன்.

(சா) வேறே விகாரங்களும் உண்டாகும்.

(உ-ம்.) பசு + கிளி = பைங்கிளி.

# ரு. ஒழிபியல்.

## 5. APPENDIX TO ETYMOLOGY.

---

### 122. COMPOUNDED AND UNCOMPOUNDED WORDS.

கஉஉ. மேற் சொன்ன நாலு வகையான சொற்களைப் பகுபதம் என்றும் பகாப்பதம் என்றுங் கூறுவதியாது?

பகுக்கப்படாத இயல்பினையுடைய சொல் பகாப்பதம் என்றும், பகுதி விகுதி முதலிய உறுப்புகளால் உண்டாகிப் பகுக்கப்படுஞ் சொல் பகுபதம் என்றுஞ் சொல்லப்படும்.

(உ-ம்.) பொன், நட, நல், கொல், எ-ன, பகாப்பதங்களாம்.
பொன்னன், நடந்தான், நன்மை, அந்தில், எ-ன, பகுபதங்களாம்.

### 123. THE ELEMENTS OF COMPOUNDED WORDS.

கஉ௩. பகுபதங்களின் உறுப்புகள் எத்தனை?

பகுதி, விகுதி, இடைநிலை, சாரியை, விகாரம் ஆகிய இவ்வைந்துமே பகுபதத்தின் உறுப்புகள் ஆம்.

(உ-ம்.) கூனி என்பதில், பகுதி, கூன், விகுதி, இ எனக் காண்க.
செய்தான் என்பதில், பகுதி, செய், விகுதி, ஆன், இடைநிலை த், எனக் காண்க.

உண்டனன் என்பதில், பகுதி, உண், விகுதி, அன், இடைநிலை ட், சாரியை அன், எனக் காண்க.
துணத்தான் என்பதில், பகுதி, துணம், விகுதி' ஆன், சாரியை அத்து, கெடுதல்விகாரம், எனக் காண்க.

124. AUXILIARY VERBS.

கஉச. துணைவினை ஆவது என்ன?

தமக்குரிய பற்பல பொருட்களைத் தருவதும் அன்றி மற்ற வினையெச்சங்களைச் சார்ந்து வரும் வினை துணைவினையாம். இவற்றுள்;

PASSIVE VERBS.

(க) படு, உண் என்னும் வினைகள் செயப்பாட்டு வினையை யுண்டாக்குந் துணைவினைகளாம்.

(உ-ம்.) செய்யப்பட்டது.
உண்ணப்பட்டது.

PERFECT AND PLUPERFECT TENSES.

(உ) இரு என்னும் வினை முற்காலத்தில் முடிவான செய்கையையுங், குறித்த காலத்துக்கு முன் முடிவான செய்கையையுங் குறிக்கும்.

(உ-ம்.) கட்டியிருக்கிறன், என்பதில் இரு என்பதின் நிகழ்காலமானது துணைவினையாகிக், கட்டின செய்கை முடிவாயிற்று, என்று உணர்த்துகிறது.
கொற்றன் இங்கே வருமுன்னே கட்டியிருந்தான், என்பதில் இரு என்பதின் போன காலமானது துணைவினையாகிக், கொற்றன் வந்த காலத்துக்கு முன்னமே முடிவான செய்கையை உணர்த்துகிறது.

NEGATIVE VERB.

(௩) இரு என்னும் வினை எதிர்மறைவினையெச்சத்தைச் சார்ந்து எதிர்மறை வினைமுற்றாகும்.

(உ-ம்.) செய்யாதிருக்கிறான்.
செய்யாமலிருந்தான்.
செய்யாதிருப்பான், முதலியவும் அப்படியே.

PERMISSION.

(௪) ஆம் என்னும், வருங்காலத்துவினைமுற்று மற்றவினையின் தொழிற் பெயரைச் சார்ந்து உத்தரவு கேட்கிறதிலுங் கொடுக்கிறதிலும் வழங்கும்.

(உ-ம்.) வரலாமா? வரலாம்.

AUXILIARY VERBS WHICH STRENGTHEN OR MODIFY THE MEANING.

(௫) கொள், விடு, போடு இடு, வரு முதலிய வினைகளுந் துணை வினைகளாகி அசைநிலைகளாகவுஞ், சிலவிடத்துத் தமக்குரியபொருளைத் தருவதாகவும் வரும்.

(உ-ம்.) வாங்கிக்கொண்டேன், என்பது, எனக்காக வாங்கினேன் என்றர்த்தங் கொள்ளும்.
தருமஞ் செய்துகொண்டு வருகிறான் என்பது வழக்கமாய்ச் செய்தான் என்றர்த்தங் கொள்ளும்.
எறிந்துபோட்டான், என்பது தன்னைவிட்டு நீக்கினான் என்றர்த்தங் கொள்ளும்.

அனுப்பி விட்டான், வந்திட்டேன், } என்பதில் { விடு, இடு, என்னும் வினைகள் அர்த்தமின்றி அசை நிலைகளாகவந்தன.

## 125. DEFECTIVE VERBS.

கஉ௫. குறைவினை ஆவதென்ன?

தெரிநிலைவினைக்குரிய சிலவற்றிற் குறைவுற்று வழங்கிய வினையானது குறைவினை ஆம். இவைகளின் முறைகளைக் காட்டிய அட்டவணை ஆவது:

| பகுதி. | விகுதிகளைப் பகுத்துக் காண்க. |
|---|---|
| ஒ, | ஒக்கும், ஒத்து, ஒவ்வ, ஒப்ப, ஒத்த, ஒப்பு, ஒவ்வாது. |
| வேண்டு, | வேண்டும், வேண்டிய, வேண்டாம். |
| மாட்டு, | மாட்டேன், மாட்டாய், மாட்டாத, மாட்டாது, மாட்டாமல். |
| இல், | இல்லேன், இல்லை, இன்மை. |
| அல், | அல்லேன், அல்ல, அல்லது. |
| உள், | உள்ள, உள்ளமை, உண்மை, உள்ளவன், உள்ளவள், உள்ளது, உண்டு, உள. |
| போது, | போதும், போதாது, போதாத, போதாமை |
| கட, | கடவேன், கடமை. |
| தகு, | தகுவேன், தக, தக்க, தகும், தகுதி, தக்கவன், தகை, தகமை, தகேன், தகாது, தகாத. |
| கூடு, | கூடும், கூடாது, கூடாத. |

☞ [இவைகளிற் சில குறிப்புவினைகள் ஆம்.]

# மூன்றாவது சொற்றொடரதிகாரம்.

# III. SYNTAX.

---

**126. SYNTAX.**

கஉகூ. சொற்றொடர் என்பதென்ன?

பெயர் முதலிய சொற்கள் ஒழுங்குபடத் தொடர்ந்து நிற்குந் தன்மையே சொற்றொடர் ஆம்.

**127. A SENTENCE.**

கஉஎ. வாக்கியம் ஆவதென்ன?

எழுவாயும் பயனிலையுஞ் செயப்படுபொருள் முதலியவைகளோடு கூடி யேனுங் கூடாதேனும் முடிவு பெற்று நிற்பது வாக்கியம்.

**128. SUBJECT.**

கஉஅ. எழுவாய் ஆவதென்ன?

வாக்கியத்தின் முதற்பொருள் எழுவாய் ஆகும். எழுவாய் என்பது கர்த்தா.

(உ-ம்.) வீடு இடிந்தது, என்பதில் வீடு என்பது வாக்கியத்தின் முதற்பொருளாகிய எழுவாயாம்.

**129. FINITE VERB, OR ITS SUBSTITUTE.**

கஉகூ. பயனிலை ஆவதென்ன?

வாக்கியத்தின் முதற்பொருளின் செயலைக் காண்பிப்பது பயனிலை ஆம்.

129.* THE OBJECT.

கஉகூ.* செயப்படுபொருள் ஆவதென்ன?

ஒரு வினைமுதல் செய்யுந் தொழிலை ஏற்கும் பொருளே செயப்படுபொருள் ஆம்.

130. SENTENCES OF ONE WORD.

கங0. ஒரேசொல்வாக்கியம் ஆகுமா?

வினைமுற்றிலே மூவிட எழுவாய்த்தொக்கிருந்து, திணை பால் தோன்றுவதால் ஒரு வாக்கியம் ஆம்.

(உ-ம்.) வருகிறான்.

131. FINITE VERB UNDERSTOOD.

கஙக. பயனிலையுந் தொக்கு வருதலும் உண்டோ?

பயனிலையுந் தொக்கு வருவதும் உண்டு.

(உ-ம்.) நல்லவன் எவன்?

132. DEPENDANT WORDS.

கஙஉ. எழுவாய்க்கும் பயனிலைக்கும் நடுவே வருவதென்ன?

எழுவாய்க்கும் பயனிலைக்கும் நடுவே பல அடைமொழிகள் வருதலும் உண்டு.

(உ-ம்.) நல்ல மனிதன் தாழ்மையாய் இருப்பான், என்பதில் மனிதன் என்பது எழுவாய்; இருப்பான் என்பது பயனிலை; நல்ல, தாழ்மையாய், என்பவை அடைமொழிகள்.

133. COMPLEX SENTENCES.

கஙங. எழுவாய் ஒன்றும் பலவும் ஒரு பயனிலையும், பல பயனிலைங் கொள்ளுமோ?

எழுவாய் ஒன்றும் பலவும் ஒரே பயனிலையுங் கொள்ளும், பல பயனிலையுங் கொள்ளும்; பல பயனிலைகளாகிய வினைகளிற் கடைசி வினைமாத்திரம் முற்று வினை ஆம்.

(உ-ம்.) இவனும் அவனுந் தோட்டத்திலிருந்தார்கள், என்பதில் இரண்டு எழுவாயும் ஒரே பயனிலையோடே வந்தன.—

அரசன் மந்திரியை அழைத்துக், காரியத்தைவிசாரித்து உத்தரவுசொன்னார், என்பதில் ஒரே எழுவாய் மூன்றுபயனிலையையுங் கொண்டது.

**134. CONCORD.**

கநச. பயனிலை எழுவாயோடே எவ்வாறு இசையும்?

பயனிலை எழுவாயோடே திணை, பால், இடம் ஆகிய இவைகளில் மாறுபடாமல் இசைவாய் இருக்கவேண்டும்.

(உ-ம்.) நான் வருவேன்.
குதிரை வந்தது.
மனிதர்கள் வந்தார்கள்.

**135. MANY SUBJECTS.**

கநரு. பல எழுவாய் வருங்கால் பயனிலை எவ்வாறு முடியும்?

உயர்திணையாகிய பல சொற்கள் எழுவாயாக அடுக்கி வரில் பயனிலை பலர்பாலாக முடியும்.

அஃறிணையாகிய பல எழுவாய் வரில் பயனிலை பலவின்பாலாக முடியும்.

(உ-ம்.) மனிதனும் ஸ்திரீயும் வந்தார்கள்.
மரமுங் கனியுங் கெட்டன.

**136. SUBJECTS OF DIFFERENT PERSONS.**

௧௩௬. வெவ்வேறே இடத்து எழுவாய் அடுக்கி வரில் எவ்வாறும்?

தன்மையிடத்து எழுவாயோடு முன்னிலை படர்க்கையிடத்து எழுவாய் அடுக்கிவரில் முற்றுவினை ஆனது தன்மையிடம் ஆம். முன்னிலை இடத்து எழுவாயோடே படர்க்கையிடத்து எழுவாய் அடுக்கி வரில் முற்றுவினை யானது முன்னிலை இடம் ஆம்.

(உ-ம்.) நானும் நீயும் அவனும் போனோம்,
நீயும் அவனும் போனீர்கள்.

**137. ANOMALIES.**

௧௩௭. வழுவமைதி ஆவதென்ன?

இலக்கண விதிக்கு வேறுபாடாகி வழுவாக இருந்தும், நூல்களிலே வழங்கிவருகிற நடை ஆம். சிலவிடத்து, ஒருமையில பன்மையும், பன்மையில் ஒருமையும், ஓரிடத்தில் பிற இடமும், ஒரு திணையில் பிறதிணையும், ஒரு பாலில் பிறபாலும் வருதல் உண்டு.

(உ-ம்.) தீ எரிந்தன என்பதில் ஒருமையில் பன்மை வந்தது. பிள்ளைகள் வந்தது என்பதில், பன்மையில் ஒருமை வந்தது. நீயோ, அவனோ ஆர்வந்தார்? என்பதில் ஓரிடத்தில் பிற இடம் வந்தது. என்று தரும் என்பதில் உயர்திணை ஆண்பாலுக்கு அஃறிணை ஒன்றன்பால் வந்தது.

**137.* INTERCHANGE OF CASAL SIGNS.**

௧௩௭.* உருபு மயக்கம் ஆவது என்ன?

ஒரு வேற்றுமை உருபு வேறொரு வேற்றுமைப் பொருளைத் தருவது உருபுமயக்கம் ஆம்.

(உ-ம்.) ஏரின உழா அர் என்பது
ஏரினால் எனப்பொருள் கொள்ளும்.

**138. HONORIFIC FORMS.**

கஙஅ. கொடுந்தமிழிலே மரியாதைப்பன்மை ஆவதென்ன?

கொடுந் தமிழிலே மரியாதையாய்ப்பேசும்பொழுது ஒருமையில் வந்த பன்மை மரியாதைப் பன்மை ஆம்.

(உ-ம்.) என் தகப்பனார் வந்தார்.

**139. SUBJECT AND VERB TO AGREE IN திணை.**

கஙக. வெவ்வேறு திணையாகிய எழுவாய்கள் ஒரே வினையோடே வரலாமோ?

வரலாகாது.

(உ-ம்.) மனிதர்களும், குதிரைகளும் வந்தார்களென்று, சொல்லாமல், குதிரைகளோடு மனிதர்கள் வந்தார்கள் என்றுவது, மனிதர்கள் வந்தார்கள், குதிரைகளும் வந்தன என்றுவது சொல்லவேண்டும்.

**140. USE OF THE THIRD VERBAL PARICIPLE, OR INFINITIVE MOOD.**

கச0. மூன்றும் வினையெச்சம் எவ்வெப்பொருளைத்தரும்.

(க) பொருட்டுப் பொருளைத் தரும்.

(உ-ம்.) அவன் சொல்லப் போனான், என்பது அவன் சொல்லும் பொருட்டு போனான் என்பதாம்.

(உ) முக்காலத்துப் பொருளையுந் தரும்.

(உ-ம்.) அவர் சொல்ல ஆகும். ஒளிவர இருள் போயிற்று.
அப்படியிருக்க நாம் போக வேண்டும்.

(ங) வியங்கோட் பொருளையுந் தரும்.

(உ-ம்.) ஐயா வர.

(ச) காரணப் பொருளையுந் தரும்.

(உ-ம்.) அவன் கேட்க நான் கொடுத்தேன்.
மழை பெய்ய நெல் விளைந்தது.

(ரு) இடைச்சொல்லாக வழங்கும்.

(உ-ம்.) ஒழிய, தவிர.

141. FORMS HAVING A SUBJUNCTIVE MEANING.

கசக. முதலாம் வினையெச்சம் உம் என்பதைப் பெற்றால் எப்பொருளைத் தரும்?

முதலாம் வினையெச்சம் உம் என்பதைப் பெற்றால் உண்மையோடே நிச்சயப்பொருளும், எண்பொருளும் ஆம்.

(உ-ம்.) நான் சொல்லியிருந்தும் அவன் செய்யவில்லை, என்பது நிச்சயப்பொருள்.
அவர்கள் கூக்குரலிட்டும் அடித்துங் குத்தியும் வந்தார்கள், என்பது எண்பொருள்.

142. FORMS EQUIVALENT OF "ALTHOUGH."

கசஉ. இரண்டாம் வினையெச்சம் உம் என்பதைப் பெற்றால் எவ்வாறும்?

இன்மையோடே நிச்சயப் பொருளாய் எதிர்காலத்து முற்று வினையைக் கொள்ளும்.

(உ-ம்.) நான் சொன்னாலும் அவன் போக மாட்டான்.

143. THE RELATIVE VERBAL MODE.

கசங. பெயரெச்சம் எவ்வாறு வழங்கும்?

(க) பெயரெச்சமானது தான் சார்ந்த பெயருக்கு உரிச்சொல்லாக வழங்கும்.

(உ-ம்.) படித்த பையன். சிறந்த மகிமை.

(உ) பெயரெச்சமானது தனித்து வழங்குவதும் அல்லாமல், ஒன்றும் பலவுமான அடைமொழிகளோடேயும் வரும்.

(உ-ம்.) வாக்கியத்தில் அடங்கியிருக்கிற பொருள் அவனுக்குத் தெரியாது.

(ரு) அநேகம் பெயரெச்சங்கள் ஒரே பெயரைச் சேர்ந்தாற் கடைசியெச்சந் தவிர முந்தின எச்சங்களெல்லாம் முதல் வினையெச்சமாகத் திரியும்.

அன்றியுந் தெளிவின் பொருட்டு முந்தின பெயரெச்சங்கள் தொழிற்பெயராகத் திரிதலும் உண்டு.

(உ-ம்.) அநேகம் மனிதரைக் காப்பாற்றி மிகுந்த சத்திரங்களைக் கட்டி யாவருக்கு மன்பாய் நடந்துவந்த துரை இறந்துபோனார்.

அல்லது.

அநேகம் மனிதரைக் காப்பாற்றினவருமாய், மிகுந்த சத்திரங்களைக் கட்டினவருமாய், யாவருக்கு மன்பாய் நடந்தவருமாயிருக்கிற துரை இறந்து போனார்.

---

144. DEPENDANT SENTENCES.

கசச. இடைவாக்கியங்கள் எவை?

எழுவாயும் பயனிலையும் பல அடைமொழிகளுமுள்ள வேறொருவாக்கியம் வந்தால், அது என்று என்பதில் பிரிக்கப்பட்டு, முதல் எழுவாயையும் பயனிலையையுந் தழுவி, இடைவாக்கிய மென்னப்படும்.

(உ-ம்.) சேவகன் வந்து, கள்ளர் சில பொருள்களைக் கொண்டுபோனார்கள் என்றும், அடுத்த ஊரிலே ஒளித்துக்கொண்டிருக்கிறார்களென்றும் அறிவித்தான்; என்பதில் கள்ளர் சில பொருள்களைக் கொண்டுபோனார்கள் என்ற வாக்கியமும், அடுத்த ஊரிலே ஒளித்துக்கொண்டிருக்கிறார்கள் என்ற வாக்கியமும் இடைவாக்கியங்கள் ஆம்.

145. VERBAL NOUNS.

கசரு. தொழிற்பெயர் எத்தன்மையாய் வரும்?

தொழிற்பெயரானது பெயர்ச்சொல்லின் தன்மையால் வருவதும் அல்லாமல், வினைச் சொல்லின் தன்மையாயும் வரும்.

(உ-ம்.) தீயோரைக் காண்பதுந் தீதே.
சொல்லுதல் யார்க்கும் எளிதாம்,
சொல்லிய வகையைச் செய்யல் அரிதாம்.

146. PRESENT TENST USED INDEFINITELY.

கசசு. முக்காலத்துக்கும் உரியதான தொழிலுக்கு நிகழ்காலத்துவினை வருமா?

வரும்.

(உ-ம்.) பராபரன் எங்கும் இருக்கிறார்.

147. PRESENT AND PAST FOR FUTURE.

கசஎ. நிகழ்காலவினையும் போனகாலவினையும் வருங்காலத்தையுங் குறிக்குமா?

விரைவினாலே நிகழ்காலவினையும் இறந்தகாலவினையும் வருங்காலத்தையுங் குறிக்கும்.

(உ-ம்.) வருகிறேன்; எ-து சீக்கிரமாய் வருவேன் என்றும் அர்த்தங் கொள்ளும்.
நான் சாப்பிட்டாயிற்று எ-து நான் சாப்பிடுகிறது சீக்கிரமாயாகும் என்றும் அர்த்தங் கொள்ளும்.

148. PAST FOR FUTURE.

கசஅ. போனகாலவினை இன்னும் எப்பொழுது வருங்காலத்தைக் குறிக்கும்?

நிச்சயத்தினால் போனகாலவினை வருங்காலத்தையுங் காட்டும்.

(உ-ம்.) அப்படிச் செய்தாயே ஆனால் செத்தாய்; நமக்காக ஒரு பாலகன் பிறந்தான், என்பவை நிச்சய

மாய்ச் சாவாய் என்றும், நிச்சயமாய்ப் பிறப்பான் என்றும் பொருட்கொள்ளும்.

149. FUTURE FOR PRESENT AND PAST.

கசகூ. வருங்காலத்து வினை நிகழ்காலத்தையும் போனகாலத்தையுங் காட்டுமோ?

வருங்காலத்துவினை காரணம் இல்லாத இயல்பினால் நிகழ்காலத்தையும் போனகாலத்தையுங் காட்டும்.

(உ-ம்.) அவன் தருமங் கொடுப்பான்.
முன்னோர்கள் பல காரியங்களைச் சொல்லுவார்கள்.

150. COMPOUND WORDS.

கருo. தொடர்மொழி ஆவதென்ன?

இரண்டு முதலிய சொற்கள் தொடர்ந்து ஒரு மொழியாக வருவது தொடர்மொழி ஆம்.

(உ-ம்.) இரா + பகல் = இராப்பகல்.
ஆதி + அந்தம் + இல்லாதான் = ஆதியந்தமில்லாதவன்.

151. ELLIPTICAL AND UNELLIPTICAL PHRASES.

கருக. தொகைநிலை ஆவதென்ன? தொகாநிலை ஆவதென்ன?

வேற்றுமையுருபுகள் முதலியன தொக்கு நிற்கச் சொற்கள் தொடர்ந்து வருவது தொகைநிலை ஆம்.

வேற்றுமை உருபுகள் முதலியன விரிந்து நிற்கத் தொடர்வது தொகாநிலை ஆம்.

152. ELLIPSIS OF CASAL SIGN.

கருஉ. வேற்றுமைத்தொகை ஆவதென்ன?

வேற்றுமைஉருபு தொக்கு நிற்பது வேற்றுமைத்தொகை ஆம்.

(உ-ம்.) மரம் வெட்டினான், எ-ல் ஐ என்பது தொக்கு நிற்கிறது.

153. ELLIPSIS OF THE SIGNS OF PERSON, TENSE &c.

௧௫௩. வினைத்தொகை ஆவதென்ன?

வினை விகுதியும் இடைநிலையுந் தொக்கு நிற்க வினைப்பகுதி மாத்திரம் வருவது வினைத்தொகை ஆம்.

(உ-ம்.) கொல்யானை, என்பதில் கொல் எ-து கொல்லும், கொல்லுகிற, கொன்ற என்றர்த்தங் கொள்ளும்.

154. ELLIPSIS OF ADJECTIVAL TERMINATIONS.

௧௫௪. பண்புத்தொகை ஆவதென்ன?

குணப்பெயர் தொக்கு நிற்பது பண்புத்தொகை ஆம்.

(உ-ம்.) செந்தாமரை, எ-து செம்மையுள்ள தாமரை என விரியும்.
பெயர்ச்சொல் எ-து பெயராகிய சொல் என விரியும்.

☞ குணத் தொகை எனவும் படும்.

155. ELLIPSIS OF PARTICLE DENOTING COMPARISON.

௧௫௫. உவமைத்தொகை ஆவதென்ன?

உவமைஉருபு தொக்கு நிற்பது உவமைத்தொகை ஆம்.

(உ-ம்.) பொன் மலர் எ-து பொன்னைப் போலும் மலர் என விரியும். (௧௧. காண்க.)

156. ELLIPSIS OF THE CONJUNCTION.

௧௫௬. உம்மைத்தொகை என்பதென்ன?

உம் என்பது தொக்குநிற்பது உம்மைத்தொகையாம்.

(உ-ம்.) அவனிவன் எ-து அவனும் இவனும் என விரியும்.

157. ELLIPSIS OF OTHER WORDS.

௧௫௭. அன்மொழித்தொகை என்பதென்ன?

அல்லாத மற்றொரு பெயர் ஆவது, விகுதியாவது, தொக்குநிற்பது அன்மொழித்தொகை ஆம்.

158. THE USE OF முதல் AND ஆதி FOR &c.

௧௫௮. உம்மைத் தொகையில் முதல், ஆதி என்னுஞ் சொற்கள் எவ்வாறு வரும்?

உம்மைத் தொகையில் பல பெயர்கள் வர, இறுதியில் இருக்கும் பெயர்க்கு மாத்திரம் உருபு விரிந்து வரும். சில விடத்து அவற்றின் பின் முதலானவை, முதலானவர்கள், முதலியவர்கள், முதலியவைகள், ஆதிகள் என்னுஞ் சொற்கள் வருதலும் உண்டு.

(உ-ம்.) நன்மை தீமைகளுக்கு; மரம், வீடு முதலியவைகள்; இராசா, மந்திரி முதலானவர்கள் வந்தார்கள்;

அன்ன வஸ்திராதிகள்.

159. NOUNS OF NUMBER.

௧௫௯. எண்ணுப்பெயர்கள் எவ்வாறு வழங்கப்படும்?

பலவிதமாய் விகாரப்பட்டு வழங்கும். அவ்விகாரங்களைக் காட்டிய அட்டவணையாவது:

| | | உயிருக்குமுன். | வல்லெழுத்துக்கு முன். | மெல்லெழுத்துக்கு முன். | இடையெழுத்துக்கு முன். |
|---|---|---|---|---|---|
| 1. (க.) | ஒன்று. | ஓராயிரம், ஒவ்வொன்று, | ஒருகலம், | ஒருநூல், | ஒருவழி. |
| 2. (உ.) | இரண்டு. | ஈராயிரம், இவ்விரண்டு, | இருகலம், | இருநூல், | இருவழி. |
| 3. (ந.) | மூன்று. | முவ்வாயிரம்; மூவாயிரம், | முக்கலம், | முந்நாழி, | முவ்யாழ், முவ்வளை, மூவளை. |
| 4. (ச.) | நான்கு. நாலு. | நாலாயிரம், | நாற்கலம், | நான்மணி, நன்ஞான்கு, | நால்யானை. நால்வகை. |
| 5. (ரு.) | ஐந்து. | ஐயாயிரம், | ஐங்கலம், | ஐம்மூன்று, | ஐவ்வகை. |
| 6. (சா.) | ஆறு. | ஆறுயிரம், அவ்வாறு, | அறுகலம், | அறுமணி, | அறுவழி. |
| 7. (எ.) | ஏழு. | ஏழாயிரம், | எழுகலபெயர், | எழுமணி, | எழுவழி. |
| 8. (அ.) | எட்டு. | எண்ணாயிரம், எவ்வெட்டு, | எண்கலம். | எண்மணி, | எண்வளை. |
| 9. (கூ.) | ஒன்பது. | | | | |
| 10. (ய.) | பத்து. | பதினொன்று, பன்னிரண்டு, பத்தங்கம், | | பதின்மூன்று. | |

ஒன்றுமுதல் எட்டீறாக நின்ற எண்ணுப் பெயருக்குமுன் பத்து வரில் பது எனத்திரியும்.

(உ-ம்.) ஒருபது, இருபது, முப்பது, நாற்பது, ஐம்பது, அறுபது, எழுபது, எண்பது.

**160. THE CARDINAL POINTS.**

கசு0. திசைப்பெயர்களுக்கு உரிய சிறப்புவிதி எது?

திசைப்பெயர்கள், ஈறு கெட்டும், முதல் நீண்டும் மற்ற மொழிகளோடு புணரும்.

(உ-ம்.)

| | | | | |
|---|---|---|---|---|
| வடக்கு, | வட, | வடமேற்கு, | வடமலை, | வடகிழக்கு. |
| தெற்கு, | தென், | தென்மேற்கு, | தென்மொழி, | தென்கிழக்கு. |
| கிழக்கு, | கீழ், | கீழ்கடல், | கீழத்திசை. | |
| மேற்கு, | மேல், | மேல்கடல், | மேற்றிசை. | |

**161. NAMES OF TREES.**

கசுக. சில மரப்பெயர்களுக்கு உரிய சிறப்பு விதிகள் எவை?

(க) உயிரீற்றுச் சில மரப்பெயர்கள் முன் வல்லினம் வரில், சிலவிடத்து வல்லினம் இரட்டிக்கும்.

(உ-ம்.) அத்தி + காய் = அத்திக்காய்.

(உ) சிலவிடத்து இனமெல்லெழுத்துத் தோன்றும்.

(உ-ம்.) மா + காய் = மாங்காய்.

(ங) ஐகார வீற்றுமரப் பெயரின் ஈற்றைகாரங் கெட, அம் சாரியை தோன்றும்.

(உ-ம்.) மாதளை + காய் = மாதளங்காய்.
பனை + காய் = பனங்காய்.

(ச) இகர, உகர, லகரங்களை ஈற்றினுடைய மரப்பெயர்கள் முன்னுஞ் சாரியை தோன்றும்.

(உ-ம்.) புளி + காய் = புளியங்காய்.
புன்கு + காய் = புன்கங்காய்.
ஆல் + காய் = ஆலங்காய்.

(ரு) தெங்கு என்னும் மரப்பெயர் முன் காய் வரில், ஈற்றுயிர் மெய்கெட்டு, எகரம் ஏகாரம் ஆகும்.

(உ-ம்.) தெங்கு + காய் = தேங்காய்.

162. SYNECDOCHE.

கசு௨. ஆகுபெயர் ஆவதென்ன?

ஒரு பொருளையுடைய இயற்பெயரால் அதற்குச் சம்பந்தமான வேறொரு பொருளைத் தொன்று தொட்டு வருமுறையே வழங்குவன ஆகு பெயராம். இவற்றுள்,

(க) தாமரையின் பூவைத் தாமரை என்பது பொருளாகுபெயர்.

(உ) அகத்திலிருக்கிற மனைதை அகம், என்பது இடவாகுபெயர்.

(ங) கார்காலத்துப் பயிரைக் கார் என்பது காலவாகுபெயர்.

(ச) வெற்றிலை நட்டான், என்பதில் வெற்றிலை என்பது கொடிக்குப் பெயர்; ஆதலால் சினையாகு பெயர்.

(ரு) கார் நிறத்தையுடைய மேகத்தை கார் என்பது குணவாகுபெயர்.

(சா) திருவாசகம் என்பதில் வாசகம் என்றுங் காரணத்தினால் உண்டான நூலுக்கு வாசகம் என்றும் பெயர் ஆம். அதலால், காரணஆகுபெயர்

(எ) அலங்காரம் என்பது அலங்காரம் என்னும் இலக்கணமாகிய காரியத்தின் பெயர், அதின் கருவியாகிய நூலுக்கும் பெயர்; அதலால் காரியஆகுபெயர்.

(அ) திருவள்ளுவர் செய்த நூலைத் திருவள்ளுவர் என்பது கர்த்தாஆகுபெயர்.

(கூ) தோகை வந்தாள் என்பதில் தோகை என்பது பெண்டுக்குப் பெயரானதால் உவமைஆகுபெயர்.

163. PRESCRIPTIVE USAGE.

கசுஈ. மரபு ஆவதென்ன?

எந்தப் பொருளை, எந்தச் சொல்லால், எந்த வழியால், அறிவுடையோர்கள் சொன்னார்களோ, அந்தப் பொருளை, அந்தச் சொற்களால், அந்த வழியால் சொல்லுவது மரபு எனப்படும்.

### 164. THE USE OF படி.

கசுச. படி என்னுஞ் சொல் எவ்வாறு வழங்கும்?

படி என்பது விதம் என்றர்த்தங் கொள்ளும்; ஆகிலும், பெயர் எச்சத்தின் இறுதியிலே வருங்கால், படி படியாக படிக்கு என்பவை பொருட்டுப் பொருளையும், படியினால் என்பது முகாந்திரத்தையுங் காட்டும்.

(உ-ம்.) இதை அறியும்படி (படியாக, படிக்கு) வந்தேன்.
நீ இதைச் செய்தபடியால் தண்டிக்கப் படுவாய்.

### 165. ENGLISH STOPS, AND THEIR SIGNS.

கசுரு. இங்கிலீஷ் இலக்கணத்துக்குரிய நிறுத்தக் குறிப்புகள் முதலிய அடையாளங்கள் சிலவிடத்துத் தமிழ் நூல்களிலும் வழங்கப்படும்; அவை எவை?

அவற்றுள் மிக வழங்குவன ஆவன:

, என்பது ஓர் மாத்திரை நிறுத்தம்.
; என்பது இரு மாத்திரை நிறுத்தம்.
: என்பது மூன்று மாத்திரை நிறுத்தம்.
. என்பது நான்கு மாத்திரை நிறுத்தம்.
! என்பது அதிசயக் குறிப்பு.
? என்பது வினாக்குறிப்பு.
§ என்பது பிரிவு, அதிகாரத்தின் உள் வகுப்பு.
¶ என்பது வேறே விசேஷத்தைக் காட்டுவதற்குத் துவக்கம்.

### 166. NEGATIVE PREFIXES.

கசுசு. அ, அந், நிர் என்னும் கிரந்த விகுதிகள் சொல்லின் முதலிலே என்ன அர்த்தங் கொடுக்கும்?

பெரும்பாலும் எதிரர்த்தங் கொடுக்கும். இவற்றுள், உயிர்முன் அந் என்றும், உயிர் மெய் முன் அ என்றும், இரண்டின் முன் நிர் என்றும் வரும்.

(உ-ம்.) நிர்ப்பாக்கியம், நிராசாரம்.
அநாதி அசட்டை.

---

## நான்காவது: யாப்பதிகாரம்.

## IV. PROSODY.

**167. POTERY.**

கசுஎ. யாப்பு ஆவதென்ன?

பலவகை மொழிகளை அசை, சீர், தளை, அடி, தொடை என்றிவற்றால் யாப்புற இணைத்துப், பல அலங்கார வகையாற் சிறப்புப் பொருந்தச் செய்யப்படுவன யாப்பென்னப்படும்.

☞ யாப்பு, செய்யுள், பா, பாட்டு, கவி, ஒருபொருள்கொளும் பெயர்கள் ஆம்.

---

## யாப்புறுப்பியல்.

## I. COMPONENT PARTS OF VERSE.

### § க. அசை.

**168. METRICAL SYLLABLES.**

கசுஅ. அசைகள் எத்தனை வகை ஆம்?

நேரசை, நிரையசை என இருவகை ஆம்.

**169. SYLLABLES LONG BY NATURE OR POSITION.**

கசுகூ. நேரசைகள் எவை?

குற்றெழுத்துத் தனியே வரினும், ஒற்றடுத்து வரினும், நெட்டெழுத்துத் தனியே வரினும், ஒற்றடுத்து வரினும் நேரசையாம்.

(உ-ம்.) க எ-து குறில் தனியே வந்த நேர்.
கல் எ-து குறில் ஒற்றடுத்து வந்த நேர்.
கா எ-து நெடில் தனியே வந்த நேர்.
கால் எ-து நெடில் ஒற்றடுத்து வந்த நேர்.

**170. SHORT SYLLABLES.**

களO. நிரைஅசைகள் எவை?

குறில் இணைந்து வரினும், குறில் நெடில் இணைந்து வரினும், குறில் இணைந்து ஒற்றடுத்து வரினுங், குறில் நெடில் இணைந்து ஒற்றடுத்து வரினும் நிரையசை ஆம்.

(உ-ம்.)

அறி எ-து குற்றெழுத்து இணைந்து வந்த நிரை.
சுறா எ-து குற்றெழுத்தும் நெட்டெழுத்தும் இணைந்து வந்த நிரை.
மரம் எ-து குற்றெழுத்து இணைந்து ஒற்றடுத்து வந்த நிரை.
விளாம் எ-து குற்றெழுத்தும் நெட்டெழுத்தும் இணைந்து ஒற்றடுத்து வந்த நிரை.

---

## § உ. சீர்.

**171. METRICAL FEET.**

களக. சீர் ஆவதென்ன?

இருவகை அசையுந் தனித்தும் இணைந்தும் வருவது சீர் ஆம்.

172. CLASSES OF METRICAL FEET.

கஎஉ. அச்சீர் எத்தனை வகைப்படும்?

அசைச்சீர், இயற்சீர், உரிச்சீர், பொதுச்சீர் என நான்கு வகைப் படும்.

173 FEET OF ONE அசை.

கஎங. அவற்றுள், அசைச்சீர் என்பதியாது?

அசைச்சீர் என்பது ஓரசைச்சீர் ஆம். அது, நேரசை தானே நின்று நேரசைச்சீர் எனவும், நிரையசை தானே நின்று நிரையசைச்சீர் எனவும் இருவகையாம்.

நேரசைச் சீருக்கு உதாரணவாய்ப்பாடு நாள். நிரையசைச்சீருக்கு உதாரணவாய்ப்பாடு மலர்.

இவை பெரும்பாலும் வெண்பாவின் ஈற்றிலே வரும். அவற்றோடு முறையே குற்றியலுகரஞ் சேர்ந்து காசு எனவும், பிறப்பு எனவும் வருவதும் உண்டு.

174. FEET OF TWO அசை.

கஎச. இயற்சீர் என்பது யாது?

இயற்சீர் என்பது ஈரசைச்சீர் ஆம். இவை அகவற்சீர் எனவும் படும்.

அது, நேர்நேர், நிரைநேர், நிரைநிரை, நேர்நிரை, என நான்கு வகையாம்.

அவற்றிற்குத் தேமா, புளிமா, கருவிளம், கூவிளம், என்பவை உதாரண வாய்ப்பாடுகள் ஆம்.

**175. FEET OF THREE** அசை.

களரு. உரிச்சீர் என்பதியாது?

உரிச்சீர் என்பது மூவகைச்சீர் ஆம். மேற்கூறிய நான்கின் ஈற்றிலே நேரசையும் நிரையசையுந் தனித்தனி, கூடிவருதலால் எட்டு வகையாம். அவ்வையாவன:

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (க) | நேர், | நேர், | நேர்..உ-டு..தே - மாங் - காய். | } இவை நான்கும் வேண்சீர் எனவும் படும். |
| (உ) | நிரை, | நேர், | நேர்..உ-டு..புளி - மாங் - காய். | |
| (ந) | நிரை, | நிரை, | நேர்..உ-டு..கரு - விளங் - காய். | |
| (ச) | நேர், | நிரை, | நேர்..உ-டு..கூ - விளங் - காய். | |
| (ரு) | நேர், | நேர், | நிரை..உ-டு..தே - மாங் - கனி. | } இவை நான்கும் வஞ்சிச்சீர் எனவும்படும். |
| (சா) | நிரை, | நேர், | நிரை..உ-டு..புளி - மாங் - கனி. | |
| (எ) | நிரை, | நிரை, | நிரை..உ-டு..கரு - விளங் - கனி. | |
| (அ) | நேர், | நிரை, | நிரை..உ-டு..கூ - விளங் - கனி. | |

**176. FEET OF FOUR** அசை.

களசா. பொதுச்சீர் என்பதியாது?

நால் அசைச்சீர் பொதுச்சீர் எனப்படும். மேற் சொல்லிய நால்வகைப்பட்ட இயற்சீரின் ஈற்றிலே, முறையே,

தண் - பூ என நேர் நேரும்,
நறும் - பூ என நிரை நேரும்,
தண் - ணிழல் என நேர் நிரையும்,
நறு - நிழல் என நிரை நிரையும்,
கூட்டில பதினாறும்.

☞ இவை பாட்டில் மிகவும் வழங்காவாம்.

---

## § ௬. தளை.

**177. CONNECTION OF FEET.**

௧௭௭. தளை ஆவதென்ன?

சீரோடு சீரும் பாட்டிலே தொடர்ந்து வரும் முறையே தளை ஆம்.

**178. CONNECTION PECULIAR TO THE ஆசிரியம் METRE.**

௧௭௮. ஆசிரியத்தளை என்பதியாது?

நேரோடு நேரும், நிரையோடு நிரையும் ஒன்றுவது ஆசிரியத் தளையாம்.

(உ-ம்.) திருமழை தலை இய,
இருணிற விசும்பின்,
விண்ணதிர் இமிழிசை கடுப்பப்,
பண்ணமைத் தவர்தேர் சென்ற வாறே.

இதில், கருவிளம், கருவிளம்; கருவிளம், புளிமா; கூவிளம், கருவிளம், புளிமா; கூவிளம், புளிமா, தேமா, தேமா; என்று "நேர்முன் நேரும், நிரை முன் நிரையும்" வந்தது காண்க.

**179. THAT OF THE வெண்பா.**

௧௭௯. வெண்டளை ஆவதென்ன?

"மா முன் நிரையும், விளம் முன் நேருங், காய் முன் நேரும்" வருவது வெண்டளை.

(உ-ம்.)

உருவுகண் டெள்ளாமை வேண்டும்;
உருள் பெருந்தேர்க் கச்சாணி அன்னார் உடைத்து.

இதில், கருவிளம், தேமாங்காய், தேமா, கருவிளங்காய், தேமாங்காய், தேமா, பிறப்பு என வந்தது காண்க.

---

## § ச. அடி.

180. LINES.

கअ௦. அடி ஆவதென்ன?

தளையினாலே இணைக்கப்பட்ட சீரோடு வருவது அடி ஆம். அவ்வடி எத்தனை வகையாம்?

இரு சீரால் வருங் குறளடி எனவும், மூன்று சீரால் வரும் சிந்தடி எனவும், நாற் சீரால் வரும் அளவடி எனவும், ஐந்து சீரால் வரும் நெடிலடி எனவும், மிக்க சீரால் வருங் கழிநெடிலடி எனவும், ஐந்து வகையாம்.

---

## § ரு. தொடை.

181. CONSONANCE.

கअக. தொடை ஆவதென்ன?

அடிகளிலுஞ் சீர்களிலும் எழுத்துகள் இசையத்தொடுப்பது தொடை ஆம்.

182. RHYME.

கअ௨. எதுகைத்தொடை ஆவதெது?

அடிகளில் முதலெழுத்துகள் மாத்திரை அளவில் ஒத்துநிற்க இரண்டாம் எழுத்து இசையத் தொடுப்பது எதுகை.

(உ-ம்.)

மலர்மிசை யேகினன் மாண்அடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்.

இதிலே மல என்பதற்கு நில என்பது எதுகை ஆம்.

கட்டென்பதற்கு பட்டென்பது எதுகை ஆம்; பாட்டென்பது எதுகை ஆகாது.

183. ALLITERATION.

கஅ௩. மோனைத் தொடை ஆவதெது?

அடி முதலெழுத்து மீண்டு வரவும், இனஎழுத்து வரவுந் தொடுப்பது மோனை. அவ்வினஎழுத்துகள் ஆவன:

| | |
|---|---|
| அ, ஆ, ஐ, ஔ<br>இ, ஈ, எ, ஏ, யா<br>உ, ஊ, ஒ, ஓ<br>ச, த,<br>ஞ, ந,<br>ம, வ, | ஒன்றுக்கொன்று மோனையாம். |

(உ-ம்.) மேற்கண்ட குறளில் மகர மோனையும் நகர மோனையுங் காண்க.

## உ. யாப்பியல்.

## II. KINDS OF METRE.

184. METRES AND THEIR SUBDIVISIONS.

கஅ௪. மேற் கூறிய உறுப்பினால் உண்டாகிய விசேஷித்த பாவும் பாவினமும் எவை?

வெண்பா, ஆசிரியப்பா, கலித்துறை, விருத்தம் முதலியவும் உண்டு.

## § க. வெண்பா.

185. THE VENBÂ.

கஅரு. வெண்பாவுக்கு உரிய இலக்கணம் என்ன?

(க) வெண்பாவிடத்து இயற்சீரும், வெண் சீரும் வரும்;

(உ) அளவடியாலே நடக்கும்; ஆயினும் ஈற்றடி சிந்தடியாக வரும்;

(ங) நாள், மலர், காசு, பிறப்பு இந்நான்கில் ஒன்று ஈற்றடியின் ஈற்றுச்சீர் ஆம்;

(ச) அதற்கு உரிய தளையாகிய வெண்டளை அன்றிப் பிறதளை வாரா.

186. KINDS OF VENBÂ.

கஅகூ. வெண்பா எத்தனை வகையாம்?

குறள், சவலை, நேரிசை, இன்னிசை என நான்கு வகை ஆம்.

187. KURAL.

கஅஎ. இவற்றுள் குறள் ஆவதெது?

நாற்சீர், முச்சீர் என இரண்டடி வருவது குறள் ஆம்.

(உ-ம்.)

கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லாதவர்.

188. SAVALEI.

கஅஅ. சவலை வெண்பா என்பதெது?

இரு குறள் ஒரு விகற்பத்தால் வருவது சவலையாம்.

(உ-ம்.)

அட்டாலும் பால்சுவையிற் குன்றா — தளவல்ல
நட்டாலும் நண்பல்லார், நண்பல்லர்
கெட்டாலும் மேன்மக்கண் மேன்மக்களே சங்கு
சுட்டாலும் வெண்மை தரும்.

189. NÊRISEI.

கஅகூ. நேரிசை வெண்பா என்பதியாது?

இரு குறளும் நடுவே தனிச்சொல்லும் வருவது நேரிசை வெண்பாவாம்.

(உ-ம்.)

தம்மை இகழ்ந்தமை தாம் பொறுப்ப தன்றிமற்
றெம்மை இகழ்ந்த வினைப் பயத்தால் உம்மை
யெரிவாய் நிரயத்து வீழ்வர்கொல் என்று
பரிவதூஉஞ் சான்றோர் கடன்.

190. INNISEI.

ககூ0. இன்னிசை வெண்பா என்பதேது?

நாற்சீர் மூவடியும் முச்சீர் ஓரடியும் வருவது இன்னிசை வெண்பாவாம்.

(உ-ம்.)

இன்றுகொல், அன்றுகொல், என்றுகொல், என்னாது
பின்றையே நின்றது கூற்றம் என வெண்ணி,
ஒருவுமின் தீயவை, ஒல்லும் வகையான்
மருவின் மாண்டார் அறம்.

---

## § உ. ஆசிரியப்பா.

191. ÂSIRIYAM METRE.

ககூக. ஆசிரியப்பாவுக்குரிய இலக்கணம் என்ன?

(க) இயற்சீர் அன்றிச்சிலவிடத்து வெண்சீருந், தேமாங்கனி, புளிமாங்கனி என்

னும் இடைநேரசை வஞ்சிச்சீரும் வரப் பேறும்.

(உ) அதில் தன் தலையன்றி வெண்டளையும் வரும்.

(௩) மூன்று முதலிய பல அடிகளான் வரும்.

(௪) ஈற்றடியின் ஈற்றசையின் ஈற்றிலே ஏகாரம் பெரும்பாலும் வரும்.

(உ-ம்.)

நீரிடை 'நுரையி' னேர்கெடும் இளமையே;
காரிடை மின்னிற் கடிதிறும் புகழே;
தேரிடை உருளிற் செல்வ' மாறுவே;
தாரிடை மதுவினிற் றவிழ்ந்தொழி இன்பமே.—

☞ ஆசிரியம் எனவும் அகவல் எனவும் படும்.

---

## § ௩. கலித்துறை.

**192. CALITTURY METRE.**

கக௨. கலித்துறையின் இலக்கணம் என்ன ?

(க) ஒரே எதுகையான நெடிலடி நான்கும் உடைத்தாகும்;

(உ) வெண்டளையைப் பெறும்;

(௩) ஒவ்வோரடியின் முதல் நான்கு சீரும் இயற்சீராகவும், இடை நேரசைக்காய்ச் சீராகவும் இருக்கும்;

(ச) ஒவ்வோரடியின் ஐந்தாஞ்சீர் கூவிளங்காய் ஆவது, கருவிளங்காய் ஆவது இருக்கும்;

(ரு) ஈற்றடியின் ஈற்றிலே ஏகாரம் வரப்பெறும்;

(சா) நேரசை முதலடியில் பதினறு அசைகளும் வரும்.

(எ) நிரையசை முதலடியில் பதினேழு அசைகளும் வரும்.

(உ-ம்.)

எரி எனக் கென்னும்; புழுவோ எனக்கெனும், இ
[ந்த மண்ணுஞ்
சரி எனக் கென்னும்; பருந்தோ எனக்கென்னுந்;
[தான் புசிக்க
நரி எனக் கென்னும்; புன்னாய் எனக்கென்னும் இ
[ந்நாறுடலைப்
பிரிய முடன்வளர்த் தேன் இதனால் என்ன பேறெனக்
[கே ?

☞ இது கட்டளைக்கலித்துறை எனவும் படும்.

---

## § ச. விருத்தம்.

**193. VIRUTTAM METRE.**

கககூ. விருத்தத்தின் இலக்கணம் என்ன?

(க) எல்லாச் சீருந் தழுவும்;

(உ) ஐந்து வகையான அடிகளால் உண்டாகும்;

(ங) தளையின்றி நடக்கும்; ஆயினும் அதற்குரிய பொதுவான விதியாவது: ஓரடியில் தேமா வந்தவிடத்து மற்றோரடியில் தேமா ஆயினும், புளிமா ஆயினும் வரும். கூவிளம் வந்த இடத்து மற்றோரடியில் கூவிளம் ஆயினும், கருவிளம் ஆயினும் வரும். காய் ஈற்றுச்சீருக்குக் காய் ஈற்றுச்சீரும், கனி ஈற்றுச்சீருக்குக் கனி ஈற்றுச்சீரும் வரும். மற்றதும் இவ்வாறே.

☞ சீர் தம்முள் மாறி வரில் சந்தபேதகம் ஆம்.

உதாரணம்.

கடுமனவன் பேய்கனலிற் கொடிதாகு மலைகளினுங்
[கடத்தற் கொண்ணு;
நெடுவயிரத் தினும்வலிது; கடல்பருகி, மேருவினை
[நேரோ பேர்த்துச்,
சுடுகனலை விழுங்குகினு. நிறுத்தரிது; புலன்முழுதந்
[தோன்று மூலங்
கெடுமுலகி துண்டெனினுண் டிலதாகில் இலதினைக்
[கெடுத்தல் வேண்டும்.

---

முற்றும்.